# நங்கை

## இதழ் – 45 – 2019



Nangai Women's Journal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கை

இதழ் 45 - 2019




## மகளிர் அபிவிருத்தி நிலையம்

## Certre for Women and Development
## Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

தலைப்பு : நங்கை - இதழ் 45 - 2019

ஆசிரியர் : சரோஜா சிவச்சந்திரன் M.A

ஆசிரியர் குழு : த. கிருத்திகா ஊடக வியலாளர்
கே.எஸ். சிவகுமாரன், எழுத்தாளர் / விமர்சகர்.

வெளியீடு : மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல. 07, இரத்தினம் ஒழுங்கை, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

விலை :

| உள்நாடு | வெளிநாடு |
|---|---|
| தனிப்பிரதி : ரூ. 50.00 | தனிப்பிரதி : ரூ. 50.00 |
| ஆண்டுச் சந்தா : ரூ. 600.00 | ஆண்டுச் சந்தா : ரூ. 600.00 |
| (தபாற்செலவு உட்பட) | (தபாற்செலவு உட்பட) |

## Book Details

Title : Nangai - Issue 45 - 2019

Editor : Saroja Sivachandran, B.A Hons Cey, M.A.Jaf.

Editorial Board : T. Kiruthika, Journalist
Mr.K.S. Sivakumaran, Writer / Critic

Publishers : Centre for Woman and Development,
No.07, Ratnam Lane, Off.K.K.S. Road, Jaffna,
SriLanka.
Phone : 021 222 4398

Printed by : Theepam Printers, 717, K.K.S. Road, Jaffna.

ISSN : 1800 - 3109

ISSN : 977-180-03100-0-2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | இல. |
|---|---|---|
| 1. | முன்னுரை | iv |
| 2. | மலர்ந்திடும் நங்கையே! | 1 |
| 3. | சுழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள் | 2 – 4 |
| 4. | பெண்கள் எவ்விதமான அரசியலை மேம்படுத்த வேண்டும் | 5 – 7 |
| 5. | சீதனத்தின் திணறல் | 8 |
| 6. | நீ உருவாகி பிறரை உருவாக்கு | 9 - 10 |
| 7. | மகளிர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் - 2018 | 11 - 18 |
| 8. | போதைப் பொருள் பாவனை தடுப்பில் இளைஞர்களின் பங்கு | 19 - 28 |
| 9. | பருவ காலத்திற்கு முன் பயிர் செய் | 29 - 34 |
| 10. | யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு மதங்களின் வழிகாட்டல் (கிறிஸ்தவ கண்ணோட்டம்) | 35 - 40 |
| 11. | சித்திரவதைக் கோலங்கள் | 41 - 43 |
| 12. | ஆணாதிக்க நெறிகளை பெண்கள் மீது திணிக்கும் மதவாதம் | 44 - 46 |
| 13. | சர்வதேச மகளிர் தினம் | 47 - 48 |
| 14. | ஆண் பெண் நியதி | 49 |
| 15. | யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு மதங்களின் வழிகாட்டல் (இந்து சமயக் கண்ணோட்டம் | 50 - 55 |
| 16. | "உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கெள்ளுங்கள்." | 56 - 59 |
| 17. | பெண்ணொருத்தி... | 60 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இயற்கையே தெய்வம் என்ற வழிபாட்டில் இருந்து விலகிய மனித குலம் இன்று மதங்களின் பெயரால் இனங்களிடையே முரண்பாடுகளையும், சமூகங்களிடையே விரோதங்களையும் மறைமுகமாக ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆன்மீகமே மனித குலத்தின் ஒழுக்க விழுமியங்களை நெறிப்படுத்தும் என்ற தத்துவம் என்றும் பொய்யாவதில்லை. ஆனால் ஆன்மீகத்தை நெறிப்படுத்தி வழிப்படுத்தும் ஆன்மீகவாதிகள் தமது பணியை சரியாக செயற்படுத்துகின்றார்களா? சர்வமத குழுக்கள் நாடு பூராகவும் அமைக்கப்பட்டு இனங்களுக்கிடையில் நிலவும் பூசல்களை மதத்தலைவர்களினூடாக வழிப்படுத்தும் செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் இன முரண்பாடுகளும் வன்முறையை தூண்டும் பேச்சுக்களும் மத ரீதியாக இறைவனையே கூறுபோடும் செயற்பாடுகளையுமே இன்று காணமுடிகின்றது.

இயற்கை அழகு கொண்ட இலங்கைத்தீவில், இவ்வாறான சமூக முரண்பாடுகளினால் இயற்கையோடு கூடிய அழகான கோவில்கள், வழிபாட்டுத்தலங்கள் எனக்கா? உனக்கா? என்று சொந்தம் கொண்டாடும் நிலையில் சமூகங்கள் வாழ்ந்து வருவது வேதனைக்குறியது. மத சுதந்திரமும், ஒழுக்கநெறிகளொடு கூடிய விழுமியங்களும் யாவருக்கும் பொதுவானதே. இவற்றை ஒவ்வோர் சமயம் சார்ந்ததோடு கடைப்பிடித்து ஒழுகுவாராயின் நல்லிணக்கமும் சமாதானமும் தானாகவே எம்மிடம் ஏற்பட்டுவிடும்.

ஆசிரியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்ந்திடும் நங்கையே!

பூம்பனி கூத்தாட புத்தாக்கம்
    புது முகப் பொழிவுடன்
பூத்துக் குலுங்கிடும் உன்நிழல்
    போர் புரியும் வாள் போன்று
வீரப் பெண்ணின் வீர நடைகொண்டு
    புகழ் கொண்டு வராயோ நங்கையே !!!

சின்னச் சின்ன செய்திகளை
    உன்னில் புதைத்து
மங்கையர் உள்ளம் மாற்றிட வேண்டும் என
    உன்னை மனமாற
வாழ்த்துகிறோம் நங்கையே !!!

புரட்சிப் புயல் போல
    பொங்கியெழுந்திடும்
நங்கையரை உருவாக்க
    நீ - உதிப்பாய் நங்கையே!!!
உன் வருகை பல நெஞ்சங்களை
    மகிழ்விக்க மறையாத
ஒளி போன்று தினம் தினம்
    உதிப்பாய் நங்கையே !!!

உன்னால் இன் நிறுவனம்
    புத்துயிர் பெற்றது – புகழுடன் .......

*S. Bala*
*Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் 2030 நோக்கிய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

ஐக்கிய நாடுகள் தாபனத்தால் (United Nations) பல நாடுகள் இணைந்து ஆற அமர இருந்து கலந்தாலோசித்து, ஆய்வுக்குட்படுத்தி அனைவரும் ஏற்றுக்கொண்டபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals – SDG எமதுதேசத்தில் எமது பிரதேசத்தில் எந்தளவிற்கு மனித வாழ்வியலை வழிநடத்திச்செல்லும் என்பதனை அலசி ஆராய முற்பட்டிருக் கின்றோம். 2015 செப்டெம்பரில்ஐக்கிய நாடுகளின் சபையில் 193 உறுப்பு நாடுகள் இணைந்து 17 பேண்தகு அபிவிருத்திக்கான இலக்குகளை இனங்கண்டு அதனை 2030ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதாக உறுதி மொழியெடுத்துள்ளனர்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் தோற்றுவாய் என்பது 2030ஆம் ஆண்டளவில் ஏற்படப்போகும் மாற்றங்களை உள்வாங்குவதற்கான முன்னோக்கிய செயற்பாடாக கருத்திற் கொண்டாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 17 இலக்குகளைப் பற்றி மக்களுக்கு எந்தளவில் தெளிவுபட்டிருக்கின்றது என்பதனை முதலில் கருத்திலெடுக்க வேண்டும். மக்கள் மயப்படாத எதுவும் வெற்றியளித்ததாக சரித்திரமில்லை என்பதுடன் மக்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவர்களையும் இத்திட்டத்திற்குள் உள்வாக்கினாலன்றி இது வெற்றிய ளிக்காது. அந்த வகையில் அபிவிருத்தி இலக்குகளை 17 பகுதிகளாக பிரித்து அவற்றுக்கான செயற்றிட்டங்களும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

- வறுமையை இல்லாதொழித்தல் (No Poverty)
- பூச்சியப்பட்டினி (Zero Hunger)
- தரமான சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு (Good Health and wellbeing)
- தரமான கல்வி (Quality Education)
- பாலியல் சமத்துவம் (Gender Equality)
- சுத்தமான நீர் மற்றும் துப்புரவு (Clean Water and Sanitation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலிவான மற்றும் சுத்தமான நீர் (Affordable and clean Energy)
- கௌரவமானவேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent Work and Economic Growth)
- தொழிற்சாலை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு (Industry Innovation and Infrastructure)
- குறைக்கப்பட்ட சமநிலையின்மை (Reduced Inequalities)
- பேண்தகு நகரங்களும் சமூகங்களும் (Sustainable cities and Communities)
- பொறுப்பான உணவுண்ணலும் உற்பத்தியும் (Responsible consum ption and Production)
- காலநிலை நடவடிக்கை (Climate Action)
- நீருக்கடியிலான வாழ்க்கை (Life below Water)
- நிலத்தின் மேலான வாழ்க்கை (Life on Land)
- சமாதானம், நீதி மற்றும் இறுக்கமான நிறுவனங்கள் (Peace Justice and Strong Institutions)
- இலக்குகளை அடைவதற்கான கூட்டுறவு (Partnerships for Goals)

மேலே கூறப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் பற்றி பல கலந்துரையாடல்கள் நடைபெற்றிருக்கின்றன. இதில் எங்களிடம் உள்ள வளங்களை வைத்துக் கொண்டு எவ்வாறு இத்தகைய இலக்குகளை அடைய முடியும் என்பது பற்றிய விளக்கங்கள் இனிவரும் காலங்களில் விரிவாக ஆராயப்படும்.

ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் வரையறுக்கப்பட்ட இவ்விலக்குகளை அடைவதற்கு எமக்குள்ள வசதி வாய்ப்புக்கள் மற்றும் வழிகள் இன்னும் அவற்றின் வெளிப்பாடு என்பன பற்றி நாமும் எமக்குள்ளே கலந்துரையாடி அவரவருக்கேற்ற வகையில் இவற்றை அணுகுதல் வேண்டும். மாறாக ஒருவரின் கருத்துக்களை மற்றையவர் மேல் திணிக்கக் கூடாது. இத்தகைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் எமக்கு எவ்வகையில் சாதகமான மாற்றங்களை கொண்டுவரப் போகின்றன என்பது பற்றி மக்களுக்கு விரிவாக விளக்க வேண்டிய கடமை எமக்குண்டு என்ற வகையில் இவை பற்றி விளக்கமாக தொடர்ந்து உங்களுக்கு தரப்படும்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எமது நாட்டில் வரையறை செய்திருக்கின்றார்கள். எமது வளங்கள் மற்றும் வசதிவாய்ப்பிற்கேற்ப இந்த இலக்குகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தை அடிப்படையாக வைத்தும் இவ்வாறான இலக்குகளை மையப்படுத்தலாம். இவற்றினைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கான பொறிமுறையை உருவாக்கிவிட்டால் பின்பு நாம் எதிர்பார்த்த விடங்கள் நடந்தேறிவிடுவதை அவதானிக்கலாம்.

*2015*ஆம் ஆண்டு *193* நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடி தத்தமது நாடுகளில் காணப்படும் பஞ்சம், பட்டினி, கிடைக்கும் தரமான நீர், சுகாதாரம் என பலவற்றை அலசி ஆராய்ந்ததில் முக்கியமான விடயம் ஒன்று புலப்பட்டது. முன்னைய காலங்களை விட 2015 இல் மேற்கூறிய பிரச்சனைகள் குறையத் தொடங்கியிருந்தது. எமது திட்டமிட்ட செய்கைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நிவர்த்திக்கலாம் அல்லது அவற்றின் கிடைத்தன்மையை உறுதி செய்துகொள்ளலாம் என்னும் முடிவுக்கு வந்தனர். இந்த மாற்றமே பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை இணங்கானவும் நடைமுறைப் படுத்தவும் கால்கோலானது. 17 இலக்குகளும் நிர்ணயஞ் செய்தபின் அவற்றின் கால அளவை 15 ஆண்டுகளாக வரையறை செய்தனர். 2015 இருந்து 2030 வரையான காலப் பகுதியாக நிர்ணயிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தி திட்டங்கள் (United Nations Development Programmes) வரையறை செய்ததின் படி 2030 என்பது அனைத்து இலக்குகளையும் முடிவுறுத்தும் ஆண்டாக அமையும் என எதிர்பார்த்து இருக்கின்றோம். இத்தகைய இலக்குகளை மக்கள் பங்களிப்பின்றி சுலபமாக நடைமுறைப்படுத்த முடியாது. அனைத்து நிலையிலும் உள்ள மக்களும், அரச மற்றும் அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களும் இதில் உள்வாங்கப்படல் வேண்டும். இச்சமூகத்தின் நல்வாழ்க்கையில் கரிசனை கொண்டவர்கள் பக்கபலமாக இருந்து பரிந்துரைகளை, புதிய கண்டுபிடிப்புக்களை, புதிய முறைகளை உருவாக்கி அவற்றுக்கான சரியான அடையாளங்கள் தரப்பட்டால் நீங்களும் இத்திட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

பேராசிரியர் கு. மிகுந்தன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் எவ்விதமான அரசியலை மேம்படுத்த வேண்டும்

பெண்கள் தமது வாழ்வில் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக அரசியலில் ஈடுபட வேண்டும். அரசியல் களத்திலேயே பொதுப் பணியுடன் தொடர்புடைய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பெண்கள் மட்டுமே, பெண்களுடன் சம்மந்தப்பட்ட தேவைகளை தெளிவாக அறிந்து கொண்டு வெளிக்காட்ட முடியும். அவர்களாலையே பால் நிலை தொடர்பான விடயங்களை உணர்வு ரீதியாக புரியவைக்க முடியும். ஆகவே மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் பெண்கள் நேரடியாக அரசியலில் பிரதிநிதித்துவத்தை பெற முயற்சிக்க வேண்டும்.

பொதுவாக பெண்கள், பிறருக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வு சமூக நலநோன்பு விடயங்களால் தூண்டப்பட்டே அரசியலுள் காலடி எடுத்து வைக்கின்றனர். ஆண்கள் பொதுவாகவே தனிப்பட்ட ஆர்வம், அதிகாரம் சமூக அந்தஸ்து என்பவற்றை பேண வேண்டும் என்ற ஆர்வத்தினால் அரசியலில் ஈடுபடுகின்றனர். பெண்களைப் பொறுத்த வரை ஒழுக்க மேம்பாடு, புதிய கருத்துக்கள், தூர நோக்கு போன்றவற்றை உட்புகுத்துவதில் வளவாளர்களாக செயற்படுதல் காரணமாக, மாற்றம் ஒன்றை உட்புகுத்துவதில் தமது பங்களிப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றனர். காலாகாலம் மாறும் இயல்புடைய அரசியலானது அதன் எதிர்பார்ப்புகளில் தெளிவற்றதாக இருந்த போதிலும் சமூகமயமாதல், வலுவூட்டல் போன்ற பங்கேற்பு ஆட்சி முறை கொண்டதாக அமைந்ததோடு ஆண்களை மையப்படுத்தியதாகவே அமைந்தது.

பெண்கள் ஆண்களை விட சிறந்தவர்களாகவும், ஊழல் குறைந்தவர்களாகவும் இருப்பதன் காரணமாக பெண்களை அரசியலில் ஈடுபாடு கொள்ள வைப்பதற்காக பல பயிற்சிகள், கல்வி, வாக்காளர்கல்வி, ஒழுங்குபடுத்தல் என்பவற்றிற்கூடாக பெண்கள் அரசியலில் நுழைந்து வெற்றி பெறுவதற்காக கவனம் திருப்பப்பட்டுள்ளது.

அரசியலில் பெண்கள் முதல் முதலாக ஈடுபடுதல் என்பது ஓர் ஈடுபாட்டின் முதற்கட்ட நடவடிக்கை மட்டுமே, ஆயினும், பெண்களுக்கான மேம்பாட்டுப் பயிற்சிகள் பல்வகையில் ஏற்படுத்தப்பட்டாலும் அவர்கள் அரசியலில் சிறு தொகையினராக இருப்பதன் காரணமாக பாரியமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது இதுவரை கேள்விக்குறியாக உள்ளது. சிறு தொகையினராக இருப்பதன் காரணமாக தேர்தல்களில் பல எதிர் மறை விளைவுகளையே எதிர் நோக்கு கின்றனர்.

எதிர்ப்பின் மத்தியில் சிறுதொகை யினராக பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் ஆண்களோடு இசைவான போக்கையே பின்பற்றுகின்றனர். இந்நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். தேர்தல் காலங்களில் பிரசார மேடைகளிலும் பெண் அரசியல் தெரிவாளர்கள் சமூக மட்ட பெண் தலைவர்களது ஒத்துழைப்பையும் தூண்டுதலையும் பெறக்கூடிய ஆற்றலை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும் பெண்கள் எவ்வாறு பேச வேண்டும் நடக்க வேண்டும் அரசியல் கலாசாரத்தை பால் சார் சமத்துவ சூழலுக்கு ஏற்ப மாற்றுதல் பற்றிய கலாசார விழுமியங்களை உடைப்பதற்கு பெண்கள் அரசியலில் ஈடுபடுதல் அவசியமாகின்றது. அதிகமாக அரசியலுக்கு எதிராக போராடுவதன் மூலமே திட்டவட்டமான நியாயமான அரசியல் நிலைப்பாட்டை பெறுவதற்கு உதவுவதன் மூலம் மேலும் பல பெண்கள் அரசியலில் பிரவேசிக்க முடியும்.

எவ்வாறு பெண்களை அரசியலுக் குள் ஈடுபடுத்த முடியும்

1. ஆண்களோடு பங்காளர்களாக பணிபுரிதல்
2. விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
3. பெண்களில் தகுதியான அறிவாளர் வட்டத்தை உருவாக்குதல்
4. பெண்கள் அரசியல் பிரதிநித் துவத்தை அதிகரிக்கக்கூடிய சாதகமான நடவடிக்கைகளை எடுத்தல்.
5. பாகுபாடுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கும் சட்டங்களை திருத்துதல்
6. பெண்களின் வாழ்கை தரத்தை உயர்த்துதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மகளிர் அமைப்புக்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுதல்
8. ஊடகங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்
9. பெண்கள் அரசியல் பங்கேற்பு, இவை தொடர்பான புள்ளி விபரங்கள், தகவல்களை திரட்டுதல்
10. பால்நிலை தொடர்பான விடயங்களில் தெளிவினை புரியவைத்தல்

மேலும், பெண்கள் அரசியலில் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் சாதாரணமாகவே பல் முனைப்புக்களில் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றை சாதுர்யமாக எதிர்நோக்க வேண்டின், தமது அறிவு, தேர்ச்சி, மனோபாவங்கள் போன்ற திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டிய தேவை உள்ளது.

**சாரதா பாலசிங்கம்,**
கொக்குவில்

பெறக்கூடிய பயிற்சிகள் பின் வருமாறு அமையலாம்.

1. அரசியலில் பால்சார் விழிப்புணர்வு தொடர்பில் ஆதரவு பெறுதல்
2. அரசியல் வாக்காளர் கல்வி
3. தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்
4. தேர்தல் தொகுதியை கட்டியெழுப்புதல்
5. முகாமைத்துவத்திறன்
6. வரவு செலவுத்திட்ட பகுப்பாய்வு
7. பேச்சு வார்த்தைப்பயிற்சிகள்
8. வலைப்பின்னல் தொடர்புகளைப் பேணுதல்
9. இளைய தலைமுறையினரை ஈடுபடுத்துவதற்கான உபாயங்களை வளர்த்தல்
10. தேர்தல் தொகுதி பற்றி வளவாய்வு அறிவு பெறுதல்

இவ்வாறான பயிற்சிகள் மூலம் தமது ஆற்றலை பெண்கள் வலுப்படுத்திக்கொள்வது அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கு இன்றியமையாதது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனத்தின் திணறல்



கொடுமையிலும் கொடுமையிது
பெண் அடிமை!
அதிலும் கொடியதுவே
சீதனத்தின் திணறல் ...!
உழைக்காத ஆணினமே
உனக்கேன் இந்த
சீதனம் ...!
சீதனத்தை வாங்கி வாழ்வதை
விட களவெடுத்துவாழ்வது மேல்!
பெண்களை வைத்து வாழும்
உனக்கு விடிவேதும் உண்டா?
குடும்பத்தின் பெரும் பகுதி
சுமை பெண்ணிடமே
உண்டு!
பிழைகள் பல புரிந்துவிட்டும்
உத்தமன் என நினைக்க முதல்
உன்தாயின் ஆரம்ப வரலாறு
புரியாத உனக்கேன்
இந்த இழிவு வாழ்க்கை....?

கட்டையில் வேகும் போதும்
உனக்கு மிகுதி
கொடுக்குமதிகள் உண்டா?
அதையும் கொடுப்பதற்கு........!

வாணி - யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ உருவாகி பிறரை உருவாக்கு



சிறுவர்கள் இளையோர்களுக்கான களம் ஆற்றுப்படுத்தலுக்கான அரங்கப் பயணம்

"சிறுவர் நாங்கள் சிறுவர் நாங்கள் சின்ன சின்ன சிறுவர் நாங்கள்" என்ற பாடலை சில மாணவர்கள் பாடிக்கொண்டும் அதற்கேற்ப ஆடல் அசைவுகள் மூலம் அபிநயித்துக் கொண்டிருந்தார்கள். யாழ் களரியின் வளவாளர் ஒருவர் நெடுந்தீவுச் சிறார்களுடன் மகிழ்வூட்டல் களப்பயிற்சியை வழங்கிக்கெண்டிருந்தார். வணக்கம் தம்பி நல்ல பணி செய்கின்றீர்கள் வேறு எங்கெல்லாம் இப்படியான முயற்சிகள் செய்கின்றீர்கள் என்று கேட்டோம் புன்னகைத்துக் கொண்டே பின்வருமாறு கூறினார். கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பிரதேசங்களுக்கும் சென்று இலவசமாக தன்னார்வத்தில் சிறுவர்கள் இளையோர்கள் யாவரிற்குமான ஆக்கத்திறன் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

குறிப்பாக பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தை எடுத்துக் கொண்டால் யுத்தம் நிறைவுற்றபோது கருத்தரித்த குழந்தைகள் அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்கள் போன்ற பிரச்சினைகளிற்கு கருவறையிலிருந்து முகம் கொடுத்து வருகின்றார்கள். மேற்படி பிரச்சினையை இனம் கண்டு யாழ் களரி எனும் சமூக விழிப்பணர்வு குழுவினர் மற்றும் ராகஸ்வரம் கலைமன்றம், அத்தோடு இலங்கை பல் சமயக் கருத்தாடல் நிலையம் ஆகிய அமைப்புக்களால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டுள்ளது. அதே போன்ற பணிகளையே தற்போது நெடுந்தீவிலும் முன்னெடுக்கின்றோம் என்று கூறினார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 58 வீதமானவர்கள் உளவியல் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளதாக புதிய ஆய்வொன்றின் மூலம் கண்டறிப்பட்டுள்ளது. இதில் கவலை, மனஅழுத்தம், தாக்கத்திற்குரிய பிந்திய மனச்சோர்வு அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், ஆண்களைவிடவும் அதிகளவில் குழந்தைகள், பெண்கள் உளப்பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் மேற்படி ஆய்வில் சுட்டிக்காட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. 2009 இல் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் பிறந்த குழந்தைகள் மற்றும் கருவிலிருந்த பிள்ளைகள் கல்வியில் நாட்டம் குறைந்தவர்களாகவும் மனச்சோர்வுக்கு ஆட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களுக்கான ஆற்றுப்படுத்தல், அரங்கப்பயிற்சிகள் மகழ்ச்சிப்படுத்தல்களை வழங்குமாறு பெரிய பண்டிவிரிச்சான் பங்குத் தந்தையிடமிருந்து யாழ் களரிக்கு கோரிக்கை விடப்பட்டதை அடுத்து உளவியல் சார்ந்த வளவளார்களால் ஆற்றுப்படுத்தலுக்கான அரங்கப் பயிற்சிகள் ஆளுமை விருத்திக்கான பயிற்சிகள் என்பன தன்னார்வ அடிப்படையில் இலவசமாக வழங்கப் பட்டு வருகின்றது.

இதே போன்ற பயிற்சிகள் தேவை என்று கருதும் பிரதேசங்கள் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக யாழ் களரியின் சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் "நங்கை" இதழுக்கான நேர்காணலில் கோரிக்கை ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ் களரி சமூக செயற்காட்டுக் குழுவினரின் சேவைகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட "ராகஸ்வரம் கலை மன்றம்" கலைசார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் தேசிய ரீதியிலான நல்லிணக்கம் சகவாழ்வை மேம்படுத்த இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையமும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றமையும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இன்றைய காலப் பகுதியில் பல அமைப்புக்கள் செயல்திட்டங்கள் மூலம்தான் சேவையாற்றி வருகின்றன ஆனால் சேவையாற்றுவதன் மூலம் செயல்திட்டங்களை முன்னெடுக்கும். மேற்படி அமைப்புக்களை பலப் படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகவுள்ளது. உங்கள் திட்டங்களை முன்னெடுப்பதற்கான நிதிகளை எவ்வாறு திரட்டுகின்றீர்கள் என்று கேட்டேன் அதற்கு அவர்கள் தந்த பதில் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. குறிப்பாக இசை நிகழ்ச்சிகள், வீதிநாடகங்கள், மாதாந்த பத்திரிகை வெளியீடு இந்த முயற்சிகளினால் கிடைக்கின்ற பணத்தை சமூகநல திட்டங்களிற்கு பயன்படுத்துகின்றோம் என்றார்கள் இதை நங்கை வாசகர்களுடன் பகிர்வதில் மகிழ்வடைகின்றேன்.

இவற்றை எல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் மேற்படி அமைப்புக்களின் பயிற்சிகளில் இணைந்து கொண்டதால்தான் இன்று ஒரு பெண்ணாக துணிவுள்ள சமூக சேவகியாக பணியாற்றுகின்றேன் என்பதாலாகும். 'நீ உருவாகி பிறரை உருவாக்கு' என்ற சிந்தனை - சொல் - செயல் - உண்மையில் ஏனையவர்களுக்கும் உங்கள் சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த பதிவை முன்வைக்கின்றேன்.

---

**தமிழ்நிலா,**
யாழ்ப்பாணம்
யாழ் களரி – ராகஸ்வரம் கலைமன்றம்
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்

**தொடர்புகளுக்கு : 076 296 3944**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் 2018

**வாழ்வாதார உதவி வழங்கல்**

| | |
|---|---|
| வவுனியா | - 21 பயனாளிகள் |
| துணுக்காய் | - 21 பயனாளிகள் |
| வன்னிவிளான்குளம் | - 25 பயனாளிகள் |
| கன்னாதிட்டி மாதர் சங்கம் | - 21 பயனாளிகள் |
| சிவபுரம், கிளிநொச்சி | - 21 பயனாளிகள் |
| வேரவில், மன்னார் | - 21 பயனாளிகள் |

★ தேக்கவத்தை வவுனியா மாதர் சங்கத்தில் 17.02.2018 ஆம் திகதி 21 பயனாளிளுக்கு சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக தேவையான உபகரணங்களும் மற்றும் பொருட்களும் வழங்கப்பட்டது.

**வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்**





- உணவு உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- ஊதுபத்தி உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- சிறுகடை வியாபாரத்திற்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- தையல் தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- கோழி வளர்ப்பிற்காக நிதி கையளிக்கப்பட்டது



★ துணுக்காய், மாங்குளத்தில் கணவரை இழந்தோரின் சங்கத்தில் 21 குடும்பத்தின் சுயதொழில் முன்னேற்றத்திற்காக சுழற்சிமுறை கடன் அடிப்படையில் வாழ்வாதார உதவிகள் 27.04.2018 இல் வழங்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்**

- கோழி வளர்ப்பிற்காக கோழிகள் வழங்கப்பட்டது
- தோட்டத் தொழிலுக்காக மருந் தடிக்கும் பம் வழங்கப்பட்டது
- வீட்டின் திருத்தத்திற்காக சிறு தொகை நிதி வழங்கப்பட்டது
- உணவு உற்பத்தி செய்வதற்காக பொருட்கள் வழங்கப்பட்டது
- பாரம்பரிய மருந்துவகைகளின் உற்பத்தியை மேன்மைப்படுத்த நிதி வழங்கப்பட்டது
- சிறுகடை தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது.





★ துணுக்காய், வன்னிவிலாங்குளம் என்ற இடத்தில் கணவரை இழந்தோரின் சங்கத்தில் 25 குடும்பத்தின் சுயதொழில் முன்னேற்றத்திற்காக சுழற்சிமுறை கடன் அடிப்படையில் வாழ்வாதார உதவிகள் 27.07.2018 இல் வழங்கப் பட்டது.





★ துணுக்காய், வன்னிவிலாங்குளம் என்ற இடத்தில் தாய் தகப்பன் அற்ற பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கன்னாதிட்டி மாதர் சங்கத்தில் வசிக்கும் 21 பயனாளிகளுக்கு சுய தொழிலை மேம்படுத்துவதற்காக பொருட்களும், உபகரணங்களும், நிதி உதவிகளும் வழங்கப்பட்டது.



மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் குடும்பத் தலைமைத்துவ பெண்ணின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது. சுயதொழிலாக மேற்கொள்ளும் அப்பள உற்பத்தியும், உள்ளூர் உற்பத்தியும்.

**வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்**

- அப்பள உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- தையல் தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- மெழுகுதிரி உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- சிறுகடை வியாபாரத்திற்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- உணவு உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- கோழி வளர்ப்பிற்காக கோழி வழங்கப்பட்டது
- தோல் பை தயாரிப்பிற்கான பொருட்கள் வழங்கப்பட்டது.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் பயிற்சிகளை வழங்கல்

★ மகளிர்அபிவிருத்திநிலையத்தினால் 12.02.2018 தொடக்கம் 16.02.2018 வரை வாழ்த்துமடல் தயாரித்தல் தொடர்பான பயிற்சி 121, 2ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் என்ற மகளிர் அபிவிருத்தி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு பயிற்சியளிப்பவராக துரைசிங்கம் தேனுகா என்பவர் 18 பயனாளிகளுக்கு பயிற்சியை வழங்கியிருந்தார். அவரின் திறமையும் ஆற்றலும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.





☆ அதனைத் தொடர்ந்து, 12.02.2018 தொடக்கம் 16.02.2018 வரை சிரட்டையிலான கைவினைப் பொருட்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி கோப்பாய் நிலையத்திலுள்ள பயிற்றுவிப்பாளர் தம்பிராசா சுரேஸ்குமார் என்பவரால் 20 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.





☆ புங்குடுதீவு பிரதேச சபையில் உள்ள பற்றிக் நிறுவனத்தில் அங்குள்ள 20 பயனாளிகளை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் 15.02.2018 தொடக்கம் 24.02.2018 வரை டி.சில்வா சசீமா என்பவரால் பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடனும், உள்நாட்டு சிறுகைத்தொழிலில்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளால் நாளைய சந்தைவாய்ப்புக்களும், அதன் முன்னேற்றங்களுடாக சுற்றுலாத்துறைகளின் வளர்ச்சி பெருமளவில் உயரப்படும் என்பதனை இலக்காக கொண்டு எமது மகளிர் அபிவிருத்தி நிலையமும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிலையமும் இணைந்து இப்பயிற்சி நெறியை நடாத்தியது. மற்றும் எமது மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல சுயதொழிலை உருவாக்கும் முயற்சிகளில் சிலதாகும்.

☆ மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் உறுப்பினர் விமலேஸ்வரி சிறிகாந்தரூபன் மற்றும் யூடி டுபாஸ் ஆகியோரின் ஜெனிவாபயணம் மனிதஉரிமைகள் மாநாட்டில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**சர்வதேச மகளிர் தினம் – 2018**

"WOMEN BOLD TOGETHER" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் 31.03.2018 அன்று பற்றிக் நிலையம், 1ம்,வட்டாரம், புங்குடுதீவில் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையம்




சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுவது மட்டுமின்றி பற்றிக் நிறவனத்தினால் தயாரிக்கப்பட்ட பற்றிக் ஆடைகளை கண்காட்சிப் படுத்துவதையும், உள்ளூர் உற்பத் தியான பற்றிக் ஆடைகளின் விற்ப னையை அதிகரிப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த 2018 ஆண்டு சர்வதேச மகளிர் தினம் புங்குடுதீவில் கொண்டாடப்பட்டது.



இங்கு பிரதம விருந்தினராக யமுனாதேவி பொன்னம்பலம் (அறங்காவலர், இலங்கை, சர்வோதயம்) மற்றும் இவ்விழாவை முன்னின்று நடாத்துவதற்காக கோசலை மதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) மதினி நெல்சன் (நகர சபை உறுப்பினர், பருத்தித்துறை) மாலினி அஜந்தன் (அறிவிப்பாளர், டான் தொலைக்காட்சி) திரு.எஸ். கனகரட்ணம் (அதிபர், புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலம்) மற்றும் எஸ்.தபேசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களும் வரவேற்கப்பட்டிருந்தனர். மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் இவ்விழா சிறப்புடன் நடைபெற்றது.

மற்றும் வரவேற்பு நடனத்தை புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவியும், பாம்பாட்ட நடனத்தை புங்குடுதீவு மகளிர் வித்தியாலய மாணவியும், மிகவும் சிறப்பாகவம் கலைநயத்துடனும் ஆடியிருந்தனர்.



எஸ்.சரலா என்பவரால் சர்வதேச மகளிர் தினம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப்பட்டது. பெண் அடிமை என்ற கவிதையை புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவியால் பெண்ணிற்கான சிறப்பின் உருப்படிகள் மிகஅழகுடன் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பற்றிக் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் கண்காட்சியும், விற்பனையும் நடைபெற்று 3.00 மணியளவில் விழா இனிது நிறைவு பெற்றது.

**அரசியலில் பெண்களின் வகிபாகம்**



இலங்கையில் பெண்கள் 52 வீதத்தினராக இருக்கும் போது இந்தச் சனத்தொகையினை ஆளுகின்ற அதற்கான முடிவுகளை எட்டுகின்ற நிலைகளில்பெண்கள்வெறும்5சதவீதம் தான் பங்களிப்புச் செய்கின்றனர். போருக்குப் பின்னரான காலப் பகுதியானது அதிகமாகப் பெண்களை மையப்படுத்தியதாகவுள்ளது.

இழப்பைச் சந்தித்த பெண்களின் கையில் குடும்பத்தை கட்டியெழுப்பும் பொறுப்பும் சுமையாகியது.

பெண்கள் ஆண்களில் இருந்து வேறுபட்டவர்கள். அந்த வகையில் முடிவெடுக்கும் இடங்களில் கொள்கைகளை உருவாக்கும் நிலைகளிலும், தீர்மானங்களை மாற்றியமைக்கும் நிலைகளிலும், பெண்களின் தேவைகளின் நோக்கம் வேறுபட்ட விதத்தில் மிக்க பயனுள்ளதாகவும், சிக்கனமாகவும் அமையும். இது ஆண்-பெண் இணைந்த சமூகத்தை நன்கு பிரதிபலிப்பதாக காட்டுகின்றது.

பெண்கள் அரசியலில் பங்குபற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு காலாகாலமாக இடம்பெற்றிருந்த போதிலும் அவர்களது நேரடியான பங்களிப்பு பாராளுமன்றிலோஇ உள்ளுராட்சி சபைகளிலோ குறைவானதாகவே காணப்படுகின்றது.

பெண்கள் உயர்பதவிகளை பெற்றுக்கொள்ளுதல் போர்க்கால சூழலில் பெண்கள் பாதுகாப்பு அரசியலில் அவர்களது பங்களிப்பைக் கூட்டுதல் என்பன பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகளில் ஓர் திசை திருப்பிய மாற்றமாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றங்கள் பெண்களின் வாழ்வில் மட்டமல்லாது சமூகத்தின் மேம்படுத்தலுக்கும் அப்பால் ஈர்ப்பு சக்தியாக அனைத்து விதமான செயற்பாடுகளையும் முடியாது என்றில்லாமல் பெண்களால் மாற்றமுடியும் என்ற தன்மையை ஏற்படுத்தி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாலில் தண்ணீர் கலந்தது'' போல் பெண்களிடம் ஒழிந்திருக்கும் திறமைகளும், மழுங்கடிக்கப்பட்ட சமூக சீர்கெட்ட சிந்தனைகளும் மறைந்து கொண்டு போவதையும் தற்காலத்தில் இனங்கான முடிகின்றது.

அந்த காலத்தில் ஆணின் ஆதிக்கம் பணம் என்ற போர்வையால் மட்டுமே பெண் அடிமை தோன்றியது எனலாம். ஆனால் இந்தக்காலம் பெண்களின் கைகளில் பணபுழக்கமானது பெருகுவதால் பெண்ணடிமை மறைந்து செல்லப்படுவதும் அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளாலும், இராஜதந்திர தீர்மானங்களாலும், உலகமயமாக்கலில் பெண்களின் வளர்ச்சியும் செழிப்புற்று வருகின்றது.

மகளிர்அபிவிருத்திநிலையத்தினால் அரசியலில் பெண்கள் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் வகையில் ''பெண்கள் அரசியல் செயலணி'' என்ற தனிப்பட்ட பிரிவாக அமுலாக்கி பெண்களின் அரசியல் பிரவேசத்தை அதிகரித்து வருகின்றது.

அரசியலின் முதற்படியாக உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் போட்டியிடுவதற்கான ஓர் தளத்தை ஏற்படுத்தும் வகையில் வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் அரசியலில் பங்குபற்றுவதற்கான தலைமைத்துவ பயிற்சி நெறியை வழங்கிவருகின்றது.

மேலும், உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு பற்றும் பெண்கள் அரசியல் கட்சிகளில் நிலைத்து நிற்பதற்கான செயற்பாடுகளையும், சந்தர்ப்பங்களையும் மகளிர்அபிவிருத்தி நிலையம் ஏற்படுத்தி வருகின்றது.


ஆயினும், பெண்கள் அரசியலில் பங்குபற்றுதல் முக்கியமான விடயமாகவும், பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்மானங்களை மாற்றியமைக்கும் நுட்ப நுண்ணறிவினையும் கொண்டமைந்த தேர்தல் உத்திகளே இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனை
## தடுப்பில் இளைஞர்களின் பங்கு



**வருங்காலத்தில் எமது நாட்டை ஒளிமயமாக உருவெடுத்து வரும் இளையோர் சமுதாயமே !**

நீங்கள் ஒரு விஷயத்தை அறிந்திருப்பீர்கள். இன்றைய சமுதாயத்தில் அதிகமான மக்களுக்கிடையே பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வரும் போதைப் பொருட்கள் ஆனது மக்களை தீயவழிக்கு அழைத்துச் செல்லும் போதைவஸ்துப் பொருள் பாவனைகளையும், போதைப் பொருட்களையும் அறிந்திருப்பீர்கள். இதுமட்டுமல்ல எமது நாடும் வளர்ச்சியின் கீழ் மட்டத்தில் இருக்கின்றது. குடும்பநிலையினை உயர்த்துவதற்கு முயற்சி செய்து முன்னேறும் எண்ணங்கள் அற்றுப்போய் குடும்பநிலையை சீரழிக்கும் போதைப்பாவனைப் பொருட்களின் மாயத் தோற்றங்கள் வலுப்பெற்றுவருகின்றது. அனைவரின் கண்களையும் மறைக்கும் இம்மாயை கொண்ட போதைப் பொருட்களின் பாவனையை தடுப்பதற்கு ஒளிமயமான எம் இளைஞர்களின் பங்கு மிகமுக்கியமான தொன்றாகும்.

இவையெல்லாம் எமது நாட்டு குடிமக்களிடையே அதிகமாக பாவனை செய்யப்பட்டு வரும் போதைவஸ்துகள் எமது சமூகத்தை நிலைகுலையச் செய்து வருகின்றது. அதுமட்டுமின்றி நாட்டின் வீணானகாலம் கழிக்கப்பட்டு ஆயுளை நெருங்கிக்கொண்டிருக்கும் மனிதர் கூட்டம் முட்டாள்களாக செயற்படுவது கலியுக கண்ணனின் அழிவைப் போன்றதொன்றாகும். இது நாளை தலைக்கும் சமூகத்தினை முற்றாக அழிக்கும் செயலாக காணப்படுகின்றது. இப்போதைக்கு முற்றுப்புள்ளியிட அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும்.

நாட்டின் பொறுப்பு சுமைகளை கையில் ஏந்தியுள்ள இளைஞர், யுவதிகள் மத்தியில் போதைவஸ்தின் பயன்பாட்டை ஒழிக்கும் நடவடிக்கைகளை இனம்காணும் தன்மையும், இதனால் அடுத்து வரும் தலைமுறையினை பாதுகாப்பதற்கான கடமைகளையும் பொறுப்புக்களையும் கையாண்டு நீங்கள் தொழிலில் எந்த நிர்வாகத்தில் இருந்தாலும் போதையின் பயன்பாட்டின் ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது தற்கால இளைஞர், யுவதிகளின் தலையான பொறுப்பு சுமையாகும். இளைஞர் யுவதிகளே உங்களைப் போன்றவர்களிடமும் இப்போதைப் பொருட்களின் பாவனை மேலோங்கி நிற்கின்றது இதை அனைவரும் சேர்ந்து தடுத்து நிறுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிமயமான எதிர்காலத்தை கொண்ட இளைஞர், யுவதிகளின் வாழ்க்கை,போதைப் பொருட்களின் பயன்பாட்டால் அடிமை என்ற உணர்வுகள் அழித்தொழிப்பதற்கான நடவடிக்கைகளையும், முன்னோக்கிய சிந்தனை கொண்டவர்களாகவும், மாற்றம் பெற வேண்டும். பொருளாதார ரீதியில் வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணிகளில் ஒன்று போதைப் பொருட்களின் பயன்பாடும் ஆகும். இதனால் வறுமையின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்துவது மிகமிகக் கடினமானதொன்றாகும். ஏழை மக்களிடையேயும், கல்வியறிவு குறைவான மக்களிடையேயும் இப்போதைப் பொருட்களின் பாவனை கூடுதலாக பரவிவருகின்றது.

நேரமுகாமைத்துவ கொள்கைகளை பின்பற்றி நேரத்தின் விலைமதிப்பற்ற வளத்தின் பயன்பாடுகளையும், அதற்கான திட்ட முன்மொழிவுகளையும், முன்னேற்றத்தின் பாதையையும் உருவாக்கி அதற்கான சிறந்த கொள்கைகளையும் அதற்குரிய நேரத்தந்துரோபாய திட்டங்களையும் நடைமுறைக்குச் சாத்தியமான தீர்மானங்களையும் மேற்கொண்டு சீருடனும் ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டியது எமது இளைஞர், யுவதிகள் ஆகிய நீங்கள் கற்றலின் படி ஒழுகு என திருவள்ளுவர் கூறிய திருக்குறளின் படி கல்வி கற்றதின் படி ஒழுக்க சிந்தனையாளராக மாற வேண்டும் என்பது எம் ஆதங்கம்.

ஆக்கபூர்வமான பல விடயங்களும், பல செயற்பாடுகளும் காணப்படுகின்ற எமது புனித பூமியில் ஏன் இந்த செயற்பாடுகளுக்கு மக்கள் மனமாற்ற மடைகின்றனர் என்பது ஓர் கேள்விக் குறியாகும். வாழ்க்கை ஒரு நீர்குமிழி போன்றது அதில் தீயசெயல்களை தவிர்த்து நல்ல செயல்களால் அவை நிரப்பப்பட வேண்டும். அதுவே எமது எதிர்கால சமூகத்திற்கு சேர்த்து வைக்கப்படுகின்ற புண்ணியமாகும்.

வளங்களின் உச்சப்பயன்பாட்டை மாற்றியமைக்கும் இளைஞர், யுவதிகளே! தற்கால சூழ்நிலையில் எமது சமூகத்தைச்சீரழிக்கும் பாவனைப் பொருளாகபோதைப்பொருள்பாவனை காணப்படுகின்றது. இப் போதைவஸ்து ஆனது போதை வஸ்து என்பது தீயசக்திகளால் இல்லத்தை அழிக்க பயன்படுத்தப்படுகின்ற, சரியான செயற்பாடுகளை அல்லது நிலையை தடுமாறவைக்கின்ற ஓர் பொருள் எனப்படும். இது உடல், உள ரீதியில் வசிகர மாற்றத்தை ஏற்படுத்தி இதனால் தீய விளைவுகள் மனித சீரழிவுகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் பாவனைகள் மேலும் அதிகமாகிக் கொண்டு வருகின்றது எமது மக்களிடையே காணப்படுகின்ற மூடத்தன்மைகளாலே ஆகும்.

அதுமட்டுமன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் குடும்ப வறுமையை குறைப்பதற்கான திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்துச் செல்லுகின்ற போதிலும் இப்போதைப் பொருள் பாவனை அதிகரிப்பதை தடுப்பது இளைஞர், யுவதிகளின் மத்தியில் இதற்கான "அழிப்பும் ஒழிப்புமான" திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்" எண்பதற்கிணங்க போதைவஸ்தின் விற்பனைகளும் வியாபாரங்களும் தற்போது அதிகரித்த பயன்பாடுகளும் சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் காரணிகளில் சீரழிவுகள் இடம்பெறுவதால் ஏற்படும் பாதக விளைவுகளாக இவை காணப் படுகின்றன,

- பாலியல் துஸ்பிரயோகங்கள்
- மனிதனுடைய ஆயுள்காலம் குறைவடைந்து செல்கின்றமை
- பெண்கள், சிறுவர்களின் துஷ் பிரயோகம்
- உழைக்கும் ஆண்களின் எண் ணிக்கை குறைவடைதல்
- பொருளாதார வீழ்ச்சி
- ரூபாவின்பெறுமதிகுறைவடைதல்
- குடும்பங்களுக் கிடையிலான வறுமை அதிகரித்தல்
- மனித, பௌதீக வளங்கள் வீண் விரயம் ஆக்கப்படல்
- மனிதனின் திறமைகள் மழுங் கடிக்கப்படுதல்
- அபிவிருத்தியை நோக்கி நகர முடியாமை
- மனிதப்பலம் இழக்கப்படல்
- கல்விகற்கும் மாணவர்கள்களின் ஒழுக்க சீர்கேடுகள்
- பெண்களிடேயேயும் வலுப்பெறு கின்ற போதைப் பொருட்களின் பாவனைகள்
- எதிர்கால சமூகத்தின் அழிவு

போன்றன முக்கிய காரணங்களாக காணப்படுகின்றது.

இப்போதைப் பொருள் பாவனை யானது எம் நாட்டை ஆட்டிப் படைத்து தன் மாய வலைக்குள் விழவைத்திருக்கின்றது. இதிலிருந்து நமது நாட்டை மீட்கும் இளைஞர், யுவதிகளாகிய உங்கள் ஒத்துழைப்பு மிக முக்கியமாக காணப்படுகின்றது. இந்த நாட்டை நீங்கள் தான் மீட்க வேண்டும். இதற்கு இளைஞர், யுவதிகளாகிய நீங்கள் முயற்சிக்க வேண்டும். எமது நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடிமகனின் மனங்களிலும், ஒரு எண்ணம் தோன்ற வேண்டும். ஒவ்வொரு குடிமகனும் எமது நாட்டைப் பாதுகாக்க நினைக்க வேண்டும்.

சிலகாலங்களாக, மனிதர்கள் போதைப் பொருள் பாவனைகளால் அழிவது மட்டுமின்றி அவர்களின் குடும்பங்களும் அழிந்து போகின்றது. இவற்றில் இருந்து எமது நாட்டை பாதுகாப்பதற்கான இளைஞர், யுவதிகளின் பங்கு எங்களுக்கு அவசியமாகும். அப்பொழுதான் நம் நாட்டை எம்மால் காப்பாற்ற முடியும். நீங்களே எங்கள் ஆணிவேராக செயற் பட வேண்டியவர்கள். எதிர்காலத்தில் எமது நாட்டினை உருமாற்றப் போகின்ற நீங்கள் இவ்வாறான போதைப் பொருட்களின் பாவனையை மண்ணோடு புதைத்துவிட வேண்டும். இக் கேடுவிளைவிக்கும் தீங்கான பொருட்கள் நாட்டில் மனித இனமே வாழ முடியாது அழிந்து போவதற்கான வழிவகைகளைத் தூண்டுகின்றன.


இதனை ஒவ்வொரு மனிதனும் மனதால்உணர்ந்து செயற்படுவதனாலே தீயசக்தி கொண்ட பொருட்களின் பாவனையை அழிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தீய சக்தியான போதைப் பொருட் களின் வகைகள்



கஞ்சா


கஞ்சா


பிறவுன் ஜஸ்


சிகரெட்



புகையிலை



வெள்ளை சீனி




ஹெரோயின்



மதுசாரம்


பீடி


மாமுல்






மதுசாரம்


பாக்கு


கள்ளு


குடு


மதுசாரம்




கசிப்பு


வெற்றிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைப் பொருட்கள் ஆனது மனித இனத்தையே அழிக்கும் நஞ்சுப் பொருட்களாக மாறிவருக்கின்றன. இது மட்டுமல்ல போதை பொருட்களின் பாவனையை வாயினால் நுகருவது மட்டுமல்ல ஊசி மருந்தேற்றல், மற்றும் போதை மாத்திரைகளாகவும் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் தாக்கங்கள்மிகமிகஅதிகமாக காணப்படுகின்றது. இவை பலருக்கு தெரியாத விடயமாகவே இருந்து வருக்கின்றது. இவற்றின்தாக்கங்கள் மனித பலத்தை அடியோடு அழிக்கின்ற ஓர் விடயமாகும். ஞாபகசக்திகளை மழுங்கடிக்கச் செய்கின்றது.

மனிதனிடம் காணப்படும் எதிர்சக்தி தாக்கங்களை இப்போதைப் பொருட்களின் பாவனை இல்லா தொழிக்கினறது. தற்காலத்தில் எண்ணில் அடங்காத போதைப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இவை வசதி வாய்புள்ளவர்களாலே பலமடங்கு விலை கொடுத்து வாங்கி தம்மிடமுள்ள பணத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கில் இவற்றை பல்வேறு இடங்களிலும் சந்தைப்படுத்துவதுடன் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு போதைப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்து வருகின்றனர். இவை ஏழை மக்களையும், கல்வியற்றவர்களையும் மற்றும் ஆண்கள், பெண்கள் மட்டு மல்ல அனைவரையுமே பாதிப்படைய வைக்கின்றது.

**போதைப்பொருட்களின் பாவனை தடை**

இப்போதைப் பொருட்களின் பாவனையால் வறுமை மட்டுமில்லை



அவர்களின் குடும்பத்திலும் பல துன்பத்தை கொடுக்கின்றது. இதனால் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் தொடர்பாக இடையூறு விளைவிப்பதுடன், அவர்களின் மனங்களும் சீர்குலைந்து கற்றல் செயற்பாடுகளின் திறமைகள் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றன. இதனால், எமது எதிர்கால சமூதாயம் எனி மீளமைக்க முடியாத மனித இனங்களாகவே மாற்றப்படுவார்கள். இப்போதைப் பொருட்களின் பாவனை எதிர்காலத்தின் பாரிய அளவிலான பாதகநிலைக்கே மக்களை இட்டுச் செல்லும் இதன் எதிர்தாக்கங்களை இன்று சீர்நிலைப்படுத்த முடியாவிடின் நாளை எதையுமே உங்களால் செய்யமுடியாது போகும். இதனால் எமது இளைஞர், யுவதிகளே! கண்விழித்து செயற்படுங்கள்.

எமது சகோதரர்களின் கல்வி நடவடிக்கைகள் சீர்குலையாமல் உங்களைப் போன்றே அவர்களும் சிறப்புடையவர்களாக வாழ வைக்க வழிகாட்டுங்கள். சிறுவர்கள், சிறுமிகள், அவர்கள் கூடிய அனுப வமற்றவர்கள் அவர்களுக்கு கெட்டதையோ நல்லதையோ கூறினாலும் அவர்கள் அதுவே உண்மை யென நம்பிவிடுவார்கள். அவர்களின் மனங்களிலும் இவ் வாறான தாக்கங்கள் அவர்களை நல்வழியில் இருந்து விலக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே பாடசாலை மாணவர்களை தீயவழியில் இட்டுச் செல்லாதவாறு சமூகத்தில் உள்ளவர்களும், அவர்களின் பெற்றோர்களும், அதிபர் மற்றும் ஆசிரியர்களும், ஏனைய நலன்விரும்பிகளும் இவர்களின் நலனில் அக்கறை செலுத்த வேண்டியது முக்கிய கடமையுடன் பொறுப்பும் ஆகும்.

போதையை உருவாக்கிவிட்டார்கள் அதை அழிப்பது என்பது மிக கடினமான ஒன்றாகும். ஆனாலும், கல்வி கற்கும் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்காது அவர்கள் கற்றல் செயற்பாடுகள் தொடர சகலரும் அவர்களுக்கு ஒத்துழைப்பது நல்லதொன்றாகும்.

பெற்றோர்களே! பெரியோர்களே! அவர்களின் பாதையில் பூக்களை விதையுங்கள் ஆனால் முட்களை விதைக்காதீர்கள். போதைப் பொருட்களின் பாவனை இல்லா தொழிப்பதற்கான நடவடிக்கைகளையும், அதற்கான செயற்பாடுகளையும் முன்னின்று செயற்படுத்த வேண்டும் என்பதே இன்று உங்களின் முக்கிய பங்காகும். இது நீங்கள் வாழும் உலகம் நீங்களே! அழகுபடுத்த வேண்டும் என்ற மனோநிலை உங்களிடம் இருக்க வேண்டும்.

"நன்மையும் தீமையும் நாம் செய்யும் செயல்களே பிறர் செய்தல்ல வினைகள்"

போதைப் பொருட்களை சந்தைபடுத்தும் விற்பனையாளர்களும், வியாபாரிகளும் அதனை விற்று இலட்சக்கணக்கான பணத்தை வசூலித்து பெரியளவிலான இலாபத்தை பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், விற்கும் ஒவ்வொரு போதைப் பொருட்களும் இன்னொரு மனிதனுக்கு தீங்கை கொடுக்கின்றது என அவர்களுக்குத் தெரியும். ஆனாலும், அதனை தெரிந்து கொண்டே தான் அவர்கள் விற்பனை செய்கின்றார்கள்.

அதனை சந்தைபடுத்தும் விற்பனையாளர்களும், வியாபாரிகளும் தமது எல்லையற்ற இலாபத்தினை மையமாகக் கொண்டு ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையையும், குடும்பத்தினையும் அழித்து வருகின்றனர். இவ்வாறு மனதில் ஈரமற்ற மனிதர்களாலே இதன் பாவனைகள் அதிகரித்து வருகின்றது. ஆனால், தற்கால சட்ட நடவடிக்கை மூலம் இவர்களிற்கான தண்டனை மரண தண்டனையாக விதிக்கப்பட வேண்டும் என கொள்கைத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டது. இவ்வாறானவர்கள் "பாலைவனத்தில் நீரை பாய்ச்சி" சந்தோஷம் கொள்கின்றனர். ஆனால், இவர்களின் பயணம் நெடுந்தூரப் பயணமாக அமைவதில்லை. சில காலமே, இவர்களின் வாழ்க்கையின் ஆயட்காலம் காணப்படுகின்றது.

ஆனாலும், இதனை பயன்படுத்தும் சாதாரண பொதுமக்களே! வாழ்க்கையை சீரழித்தும், உடல், உள தாக்கங்களால் பல்வேறு விதமான நோய்களுக்கும் ஆளாகின்றனர். இவை மாறாத மாற்ற முடியாத நோய்களாகவே தோன்றுகின்றன. இதனுள் அகப்பட்ட ஒவ்வொரு மனிதனும் விடுதலையின்றி, சுதந்திரமற்று இறந்து போகின்றனர். அனைத்து போதைப் பொருட்களாலும் மனிதர் பல நோய்களுக்கு உட்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்று போதைப் பொருட்களது பாவனையானது மிகப் பெரியளவில் அதிகரித்து வருகின்றது. பத்திரிகைகள், தொலைகாட்சிகள், ஊடாக பார்வையிடகூடியதாகவுள்ளது. இதனால் மனித உறுப்புக்களின் பாதிப்புக்களே அதிகம். இவற்றிற்கு பயன்படுத்தும் மருந்து வகைகளும் சரியானதாக அமைவதில்லை.

தேவையற்ற செயற்பாடுகள், தேவையற்ற நடவடிக்கைகள் தொடர் அழிவுகளுக்கே இட்டுச் செல்லும்,

பல நாட்களின் பின் இவர்களின் சமூதாயமே அடியோடு அழிந்துவிடும் என்பதே ஆராச்சியின் உண்மையாகும். "கத்தியை எடுத்தவன் கத்தியால் தான் செத்ததும் உண்மை" சில காலத்திற்கு முன் "துவக்கை எடுத்தவன் துவக்கால் தான் செத்ததும் உண்மை" போதைப் பொருட்களை எடுத்தவன் போதைப் பொருட்களின் தாக்கத்தால் தான் சாவதும் உண்மையாகும். இது அறிவாற்றல் உள்ள முன்னோர்களின் கருத்தாகும்.

## இதனால் பாதிக்கப்படுகின்ற முக்கிய உறுப்புக்கள்





கிட்னி, இதயம், நுரையீரல், கல்வீரல், மண்ணீரல், குடல் தொகுதிகள், ஈரல், சிறுநீர்த் தொகுதி, குதம், பித்தப்பை, நாடி, நாளங்கள், வாய் பகுதி, பற்கள், மூளை செயலிழத்தல், தொண்டைப் பகுதி, ஆண்மையிழப்பு, சுவாசப் பாதை செயலிழத்தல், பெண்மையிழப்பு, மனிதனுடைய எதிர்த்தாக்க சக்தி அழிதல் ஆனால், நேற்றைய காலம் போல இன்று வித விதமான வாழ்க்கை முறைகளும், மனித கலாச்சார மாற்றங்களும் மனிதர்களை பலவீனமான வழிகளுக்கு இட்டுச் செல்லவைக்கின்றது. போதைப் பொருட்களின் அறிமுகங்களாலும், பாவனைகளாலும் மனிதர்கள் மட்டுமல்ல பெண்களும் இப்போதைப் பொருட்களை சந்தைப்படுத்து பவர்களாகவும், விற்பனை செய்பவர்களாகவும், வியாபாரிகளாகவும், பாவனையாளராகவும் மாற்றப்பட்டு கொண்டிருக்கின்றனர். நாளை பெண்களின் இந்த நடவடிக்கைகளால் மேலும் சமூக சீர்கேடுகள் அதிகரிப்பது மட்டுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் வாழ்க்கை சீர்கேடுகளும் எனிவரும் பிள்ளைகளின் பிறப்புக்கள், போசனையுள்ளவர்களாகவோ சமூகத்தின் சிறப்பானவர்களாகவோ இருப்பது என்பது அமையாத தொன்றாகும். இந் நடவடிக்கைகளில் மாற்றமேற்படுத்த இளைஞர் யுவதிகளாகிய நாம் அனைவரும் செயற்பட வேண்டும் என இத்தால் பரிந்துரைக்கின்றோம்.

எனவே, இளைஞர், யுவதிகளே! இப்போதை பொருட்களின் பாவனையை விற்பவர்களையும், வாங்குபவர்களையும் இனம் கண்டு கொள்ளுங்கள். அவர்களுக்குரிய தண்டனைகளை உடனடியாக வழங்குவதன் மூலம் நாட்டினை வளப்படுத்த முடியும். இது ஓர் எடுகோளாகும். போதைப் பொருள் பாவனை தொடர்பான அறிவுறுத்தல்களை உரிய நேரத்தில் தெரியப்படுத்த வேண்டியவர்கள் போதைப் பொருட்களின் பாவனையை குறைப்பதற்கு அது தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்க வேண் டியவர்களுக்கு உடனடியாக தகவல் களை வழங்குதல், இவர்களின் ஒத்துழைப்புடன் நல்ல நாட்டினை உறுதியாக கட்டியெழுப்ப முடியும்.

- மாவட்டப்பணிப்பாளர்
- மாகாணப்பணிப்பாளர்
- பொலிஸ் உத்தியோகத்தர்கள்
- பிரதேச சபை
- பிரதேச செயலகங்கள்
- இளைஞர் யுவதிகள் கொண்ட குழுக்கள்
- சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் குழுக்கள்
- கிராம சேவையாளர்
- அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவ னங்கள்

என இது தொடர்பான அறிவுத்தல் களின் தகவலை வழங்குவதன் மூலமும், அது தொடர்பான தகவல் களை பெற்றுக்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகளை பெற்றுக் கொள்ளவும், இப்போதை பொருட்கள் பாவனையை குறைத்துக்கொள்ளவும் முடியும்.

இளைஞர் யுவதிகளே! உங்களை ஒத்த வருங்கால சந்ததியினரும் இப்போதைப் பொருட்களின் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு இருக்கின்றனர். அவர்களையும் இந்த வழியில் செல்லவிடாது தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு உங்களிடமே உள்ளது. உங்களைப் போன்றே அனைத்து சகோதர சகோதரிகளும் நல்லவர்களாக ஒழுக்க சீருடன், நற்குணங்களோடு வாழ உங்களைப் போன்ற நல்ல உள்ளம் கொண்ட இளைஞர் யுவதிகளே உங்கள் பொறுப்பென நினைத்து இவ்வாறான சீர்கெட்ட சிந்தனைகளை அடியொடு அழிப்பதற்கு அனைவருமே ஒத்துழைக்க வேண்டும். அனைத்து இளைஞர் யுவதிகளும் எதிர்காலத்தின் விருட்சங்கள் ஆகவே தீயவழிகளை மறந்து நாளைய சமூதாயத்திற்கு நல்ல வழிகளை உருவாக்கிச் செல்லுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைப் பொருள்களின் பாவனையை முற்றாக "அழிப்பும் ஒழிப்புமான" திட்ட முன்மொழி வினை கையிலெடுங்கள். உங்களின் பலமே நாட்டின் பலம். உங்களால் முடியும் என்பதை முழுமையாக உறுதிகொள்ளுங்கள். முடியாது என்பது இவ்வுலகில் எதுவுமே இல்லை. பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் மரணமென்ற இலக்கை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றான். அந்த இடைவெளிப் பயணத்தில் செய்யப்படும் ஒவ்வொரு செயல்களும், தீங்கின்றி சீரும் சிறப்பாக செய்வதாலே சிந்திக்கும் மனிதன் அவன் மரணம் முடிந்தும் அவன் பூமியில் வாழ்ந்து கொண்டிருப்பான். எமது இளைஞர், யுவதிகளே இவ்வளவு காலம் வந்த பாதை தவறாயினும், எனி செல்லும் பாதையையாவது சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

இப்போதைப் பொருட்களின் பாவனையால் மக்களுக்கும் உங்களுக்கும் என்ன நடைபெறும் என்பதை தெளிவாக விளங்கி தெளிவான சிந்தனையை முன்வைத்து வாழ வேண்டும். இப்போதைப் பொருட்களின் பாவனையை பயன்படுத்துவோரையும், சந்தைப் படுத்துவோரையும், விற்பனை செய்வோரையும், கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் உடனடியாக பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்புப் போதைப் பொருட்களின் பாவனை ஒழிப்புப் பிரிவினரிடம் அறிவிக்கவும். தொலைபேசி இலக்கம் 0213211257 அதுமட்டுமல்ல போதைப் பொருள் சார்ந்த முறைப் பாடுகளுக்கு ஜனாதிபதியால் புதிய அழைப்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்தொலைபேசி இலக்கம் 1984 ஆகும். இவ்விலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ளும் அனைவருக்குமே எந்தவிதகட்டண அறவீடுகளுமின்றி போதைப் பொருள்சார்ந்த உடனடி முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். ஏனெனில் வீடு மற்றும் பொது இடங்களிலும் போதைப் பொருள் பாவனையின் காரணமாக மக்கள் இதுவரை பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பான உடனடி முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் பல சிரமங்களை மக்கள் சந்தித்து வந்துள்ளனர். குறிப்பாக போதைப்பொருள்காரணமாகவீட்டில் இடம்பெறும் குடும்ப வன்முறை, பொது இடங்களில் பொதுமக்களை சிரமத்திற்குள்ளாக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் யாரிடம் முறையிடுவது என்றநிலை காணப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டே மக்களின் நன்மை கருதி இந்த புதிய இலக்கத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவில் வைத்து உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். ஏனெனில் இது ஓர் சமூக சீரழிகளால் ஏற்படும் சமூக விரோத செயற்பாடுகள் என்பதால் உடனடி தகவல்களை தெரிவிப்பதன் மூலம் சமூகத்தை காப்பாற்ற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப் பொருட்கள் பாவனையை சிறிது சிறிதாக அழிக்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சில சமயங்களில் உங்கள் வீடுகளிலும் போதைப் பொருட்கள் பாவனை செய்பவர்கள் இருக்கலாம் அதற்காக அவர்களுக்கு புத்திமதி கூறி அவர்களை வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளித்து பாதுகாக்க முடியும். இப்போதைப் பொருட்களின் பாவனையாளர்களை இணம் கண்டு அதற்கான தடை உத்தரவுகளை ஏற்படுத்த முடியும்.

**''நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்''**

இதனால் நாட்டின் மனிதம் சிறப்பாக செயற்படவும், கிடைக்கும் மனித, பௌதீக வளங்களை உச்சரீதியில் சிறப்பாக பயன்படுத்தவும் முடியும். வளங்கள் இன்றியமையததொன்றாகும். ஆகவே, சிறந்த மனிதர்கள் தேவை

**சோபனா - வைத்தீஸ்வராக் கல்லூரி**

**விளம்பரம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ காலத்திற்கு முன் பயிர் செய்



தனது ஒன்பதாவது பிறந்த நாள் விழாவைப் பெற்றார், உற்றார், உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து குதூகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தாள் மதுமிதா. அவள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. சிறுமியாக இருந்தாலும் தன் பெற்றோரை நினைத்துப் பெருமைப் பட்டாள் அவள். இந்த ஒன்பது வருட வாழ்க்கையிலும் தனக்கு எவ்விதக் குறையும் வைக்காமல் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து வைத்த பெற்றோரை நன்றியுடன் பார்த்தாள். அதேபோல அவளுக்கு இருந்த ஒரேயொரு உடன் பிறப்பாகிய மூத்த சகோதரன் வினோத், அந்த விழா சிறப்புற தன்னாலன பங்களிப்பை செய்து கொண்டிருந்தான். தனது பணிகளை தன்னால் முடிந்தளவு சரியாகவும், பொறுப்புடனும் செய்தான்.

உயர்தர வகுப்பில் மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்றுவிட்டுப் பல்கலைக்கழகம் புக ஆயத்தமாக இருந்த அவன் தன் தங்கை மேல் உயிரை வைத்திருந்தான். இவர்களது தந்தை மதுஷனுக்குத் தன் பிள்ளைகளைப் பற்றிய பெருமிதம் இருந்தாலும் முகத்தில் மட்டும் ஏதோ ஒரு சிறு குறையிருப்பது தெட்டத் தெளிவாக தெரிந்தது. தாயார் ரூபி வருபவர்களை நன்றாக உபசரித்துக்கொண்டிருந்தாள்.

மதுஷனின் தந்தை ஒரு பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்து தன் பேர்த்தியைப் பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார். அப்போது மதுஷன் மெதுவாக அவர் பக்கம் வந்து, "அப்பா தம்பி பாரதியை இன்னும் காண வில்லையே. காரை அனுப்பி அவர்களை வரவைக்கட்டுமா?'' என்று வினாவ, "தம்பிக்குச் சொல்ல வேண்டிய கடமைக்குச் சொல்லிவிட்டாய். இனிவருவது வராமல் விடுவதும் அவர்களின் பொறுப்பு அவர்கள் வாரநேரம் வரட்டும். வராவிட்டால் வந்தவர்கள் போனபிற்பாடு போய் அழைத்து வா அவன் குணம் தான் உனக்குத்தெரியுமே? உன்மரியாதையை அவன் கெடுத்து விடுவான்.'' என்று அவர் பதில் சொன்னதும் மதுஷன் அமைதியுடன் மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டான்.

விழா முடிந்து ஒருபடியாக கூட்டம் கலையத் தொடங்கியது. ஒருசில உறவினர்களும் அயலவர்களும் மட்டுமே மிஞ்சியிருந்தனர். அதற்கு மேலும் தாமதிக்க விரும்பாத மதுஷன் தம்பியாரை அழைத்து வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முச்சக்கர வண்டியை அனுப்பி வைத்தான். ஒருபடியாக பாரதி தன் மனைவி பிள்ளைகளோடு வந்திறங்கினான். வாருங்கள் என்று மதுஷன் அழைப்பதற்கு முன்பே பாரதியின் கடைசிப்பிள்ளைகள் நான்கும் ஓடிச் சென்று மதுமிதாவின் பரிசுப் பொருட்களை எடுத்துப் பிரித்து விளையாடத் தொடங்கினர். பாரதி மட்டும் மதுமிதாவிற்கு முத்தம் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்துவிட்டு உள்ளே சென்று எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

தன் பரிசுப் பொருட்கள் பிரிக்கப்படுவதை விரும்பாத மதுமிதா ஓடிச் சென்று அவற்றை இரண்டு மூன்றாக தூக்கி உள்ளே கொண்டு



போய் தனது அறைக்குள் பெட்டியில் பூட்டி வைத்தாள். திருமணம் முடித்து பத்து ஆண்டுகளுக்குள் ஐந்து குழந்தைகளைப் பெற்று வாழ்க்கையை வளமாக அனுபவிக்க முடியாத பாரதியின் மனைவி துஷிக்கு மதுமிதாவின் செயல்கள் எரிச்சல் மூட்டியது. அதேவேளை கையில் மதுபானம் நிறைந்த 'கிளாசுடன்' வெளியே வந்து கொண்டிருந்த பாரதியியைப் பார்த்து விட்ட அவள், 'உங்க அண்ணன் பிள்ளையின் கெட்டித்தனத்தைப் பார்த் தீர்களா? எங்களுடைய பிள்ளைகள் அந்தப் பொருட்களை எடுத்து விடுவார்கள் என்று எல்லாவற்றையும் உள்ளே கொண்டு போய் வைக்கிறாள் இது தெரிந்து தான் நாங்கள் வரவில்லை நீங்கள் மட்டும் போய் வாருங்கள் என்று படித்துப் படித்துச் சொன்னேன். கேட்டீர்களா? இப்ப உங்களுடைய பிள்ளைகள் அவமானப்படுகின்றார்கள் என்று கூறி முடிப்பதற்குள் பாரதியின் இரட்டைப் பிள்ளைகளும் வந்து அவன் காலை கட்டிக் கொண்டு அழுதனர்.

அதைப் பார்த்த மதுஷனுக்கு முகம் கறுத்துவிட்டது. மதுமிதாஉன்னுடைய தம்பி, தங்கைகளுக்கும் பொருட்களைக் கொடுத்து விளையாடம்மா.'அவர்கள் மன வருத்தப்படுவார்கள் என்று கூற, அதைப் பொறுக்காத அவன் தந்தை பொருட்களை குழந்தை மதுமிதாவே இன்னும் பிரித்துப் பார்க்கவில்லை. அதற்குள் என்ன அவசரம். நாளைக்கு ஆறுதலாக எல்லோரும் சேர்ந்து விளையாடலாம் என்றார். அவரது பேச்சு துஷிக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது "பெரிய பொருட்களும் நீங்களும்.. நாங்கள் வழியில்லாதவர்கள் என்று நினைத்து விட்டீர்களாக்கும். உங்களுக்கு எப்பவும் மூத்த பிள்ளையோடு தானே பாசம் நேசம் எல்லாம். அதால தான் விழாவும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று வீட்டோடு இருந்தோம். உங்கள் அன்பான மூத்த பிள்ளை தான் வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை எல்லாம் வலிந்து அழைத்து வந்தார். குழந்தைகள் எண்டால் அதை இதை தொடத்தான் செய்யும்.. அவர்களின் குணத்தை எம்மால் மாற்ற முடியுமா..?என்று அவள் முடிக்கவில்லை. ஓ உங்கட பிள்ளையின் கெட்டித்தனம் தெரிந்தது தானே.. போன முறையும் வந்து மதுமிதாவின் பொம்மைகளை உடைத்தார்கள் அதற்கு முதல் அவளுடைய காரை அக்குவேறு ஆணி வேறாக கழட்டிப் போட்டார்கள்.. இதை விட வேறு எதெல்லாம் செய்தார்கள் என சொல்வா வேண்டும்.

எல்லாம் பாடுபட்டுத் தேடினால் தான் தெரியும் கஷ்டமும் நஷ்டமும். இலவசமாக கிடைத்தால் எல்லோரும் நோகாமல் புண் துடைப்பார்கள். தகப்பனைப் போல பிள்ளைகளும் ஊதாரிகளாகப் போனார்கள். அவர் முடிக்கவில்லை. அண்ணா என்னொரு 'போத்தல்' தாங்கோ.. பாரதி தமையனிடம் கெஞ்சி மன்றாடினான்... நீ என்முன் குடிக்கக் கூடாது என்பதற்காகத் தான் எனது நண்பர்களுக்காக வேண்டியதை உன் கண்ணில் படாமல் ஒழித்து வைத்தேன்.. எப்படியோ நீ தேடி எடுத்து விட்டாய்.. இனிப்போதும் பாரதி.. போய் வேறு எது வேண்டும் என்றாலும் எடுத்துக் குடி.என்று மதுஷன் கண்டிப்புடன் கூறி முடிப்பதற்குள்...

'சீ வெட்கம் இல்லையா?....... இப்படி கெஞ்சித்தான் குடிக்க வேண்டுமா? என்று துஷி பொரிய.. இதுக்குமட்டும் வெட்கப்படுகிறாயே அம்மா.. மாதாமாதம் உங்கள் குடும்பம் ஓடுவதற்கு ஐயாயிரம் ரூபாவைத் தாரைவார்க்கிறானே மூத்தவன்.. அதை நீ வேண்டாம் என்று கூறி உன் கணவனை நல்லவனாக்கியிருந்தால் ரோசம் பற்றி நீ பேசுவதற்கு அருகதை உண்டு. அதைவிட்டு! என்று பேச்சைத் தொடர முன்

வினோத் ஓடி வந்து அவரது வாயைப் பொத்தி.. வேண்டாம் அப்பப்பா.. சித்தப்பா என்னவாவது செய்துவிட்டுப் போகட்டும்.. ப்ளீஸ் ஒன்றும் பேசாதீர்கள்.. என்று அவரைத் தடுத்து விட்டான்.. அதன் பின் சற்று மௌனம் நிலவியது. தொடர்ந்தும் பாரதி குடும்பம் எல்லாவற்றையும் மறந்து சிற்றுண்டிகளைச் சுவைக்கத் தொடங்கினான். பாரதியின் மூத்த மகன் சுரேன் மட்டும் ஏதோ ஒரு மாதிரியாக தூங்கி விழுந்து கொண்டிருந்தான்.

இருபதொரு வயது இளைஞனுக் குரிய கலையும் துடிதுடிப்பும் அவன் முகத்தில் காணப்படவில்லை. முகமும் உடலும் வாடி வதங்கியிருந்தன. சிறிது உசார் ஏற பாரதி பாடி ஆடத் தொடங்கினான். தூங்கிக் கொண்டிருந்த சுரேனும் எழுந்து தகப்பனுடன் சேர்ந்து கும்மாலம் அடிக்கத் தொடங்கினார்கள். குழந்தைகளும் குதூகலமாக ஆடின.. இடையில் பாரதி போய் தமையனுக்கு முத்தம் கொடுத்துவிட்டு தகப்பனின் காலில் விழுந்து நமஸ்கரிக்க அவர்.

'கண்கெட்ட பிறகு எதற்கு சூரிய நமஸ்காரம்' என்று நச்சரிக்க.. 'யாருக்கப்பா கண்கெட்டுவிட்டது.. எனக்கா அல்லது உங்களுக்கா.. இல்லாட்டி அண்ணாவை மட்டும் என்ஜினியராக படிக்க வைத்துவிட்டு கார் பங்களா என்று செல்வமாக அவன் வாழ.. என்னை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி கைவிட்டிருப்பாயா...? என்று பாரதி புலம்ப தகப்பன் உருத்திர மூர்த்தியானார்.

“டேய்...உன்னுடைய கதை எதுவும் எனக்கு வேண்டாம்.. நீ இப்பவே வெளியே போ... நீ வராமல் விட்டிருந்தால் எல்லாம் நல்ல படியாக முடிந்திருக்கும். இவன் மதுஷன் தான் ஏதோ பெரிய சகோதர பாசத்தைக் கண்டுவிட்டான்.உன் மேல் பாசம் ஊற்றெடுக்கிறது போல. அவனது வேலை தான் இது. ‘ டேய் பாரதி... உனது அம்மா இறக்கும் போது மூன்று வயது. 21 வயது வரை உங்களை நான் வேலைக்குப் போய் சாப்பாடு கொடுத்து எந்தக் குறையும் வைக்காமல், எவரிடமும் கை ஏந்தாமல்வளர்த்தேன். யாருமே உங்களை தவறாகவோ, பிழையாகவோ கதைக்காமல் தான் வளர்த்தேன்.. அது மட்டுமல்ல.. உயர்தர வகுப்பு வரை படிக்க வைத்தேன்... அதற்கு மேலும், மேற் படிப்பை தொடர்வதற்கு நான் அயராது பாடு பட்டிருப்பேன்...அதற்குள் உனக்கொரு காதல் .....கலியாணம் என.. நீ ...தான் திசை மாறி பயணத்தை இடையில் தொடர நினைத்தாய்... அதன் பின் உனது வாழ்க்கையே குட்டிச் சுவராகிவிட்டது. உனது காதலை நான் தடுக்கவில்லை. படித்து நல்லதொரு உத்தியோகம் எடுத்த பின் கலியாணத்தை செய்துகொள் என்றேன் கேட்டாயா..? கழுதை...... இடையில் தடுமாறிவிட்டாய்...

அப்ப என்னுடைய சொல் உன் காதில் விழவில்லை.நான் சொல்லுவது கசப்பாக இருந்திருக்கும்...இப்பதான் கஷ்டம் புரியுதோ... கல்யாணம் செய்து பத்து வருடத்தில் ஐந்து பிள்ளைகள்.... இன்னும் எத்தனை பெறப் போகின்றாயோ..?

‘பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ் வாயாக’ என்று தானே..... அந்தக் காலத்தில் வாழ்த்திறவர்கள். அது உங்களுக்குத் தெரியாதாக்கும்.... என்று பாரதி குறுக்கிட்டு பேசத்



தொடங்கினான்....

“மடையா.... அந்தக் காலத்தில் அதைப் புரிந்து கொண்டார்கள்..... பதினாறும் என்றால் பதினாறு வகைச் செல்வங்களை மட்டும் தான் குறிப்பிட்டார்கள். அச்செல்வங்களுடன் சீருடன் சிறப்பான குடும்பமாய் வாழ்வீர்கள்...என்பது தான் அதன் அர்த்தம்.... பதினாறு பிள்ளைகளை அல்ல... இப்பவே குடும்பம் நடத்த அண்ணாவின் உழைப்பில் பாதி தேவைப்படுகின்றது. குடிவேறு எப்படி உன் குடும்பம் உருப்படப் போகின்றது.

அண்ணாவைப் பார் உனக்கு ஐந்து வயது மூத்தவன். நான் திரும்பி வேலையால் வரும் வரைக்கும் தாயைப் போல் உன்னை வளர்த்தான். நீ உனது விருப்பத்திற்கு ஒரு பெண்ணை கூட்டிக் கொண்டு போன பின்னும் அவன் பொறுமையோடு படித்து என்ஜினியரானான்.

நான் உன்னை கண்டிக்கும் போதெல்லாம் உனக்காக பரிந்து பேசுவான். எனது சொல்லுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டு பருவம் வந்த பிற்பாடு திருமணம் செய்து அமைதியாக வாழ்க்கின்றான். அதைப் பார்க்க உங்களுக்குப் பொறாமையாக இருக்கின்றதா....? நீஙகள் இருக்கும் காணியை அண்ணன் வாங்கித் தராவிட்டால் இன்று நீயும் உன் குடும்பமும் நடுத் தெருவில் தான்... உனது மூத்தவன் சுரேனையை விட வினோத்திற்கு இரண்டு வயதுதான் சிறியவன். மூன்று'ஏ' யோடு பாஸ் பண்ணிவிட்டான். உனது பொடியன் எந்த நேரமும் கஞ்சா அடிச்ச மாதிரி.... உழைப்பும் இல்லை படிப்பும் இல்லை.

மதுமிதாவிற்கும் உனது மூன்றாவது மகளுக்கும் ஒரு வயது தான்... புலமைப்பரிசிலில் இலங்கையில் முதலாவதாக வந்திருக்கின்றாள் அவள். உனது மகளாள் ஏன் அவளைப் போல படிக்க முடியவில்லை. பரீட்சையில் சித்தியடையவில்லை... அதுக்குள் பெரிய கதை போடாய்ப்.... போடுகிறாள்.....

அவர் முடிக்கவில்லை.... "அப்பா.... என்ன இது...? அவன் வந்த நேரம் தொடக்கம் தொண தொண என்று அறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.... ஏதோ தவறு விட்டுப்போட்டான்... எனக்கும் அவனைப் பார்க்க துக்கமாகத் தான் இருக்கிறது என்ன செய்வது...? இது அவனது விதியாகிவிட்டது. ஏதோ நான் இருக்கும் வரை அவனுடைய குடும்பத்திற்கு உதவி செய்வேன்....? தம்பி... துஷியையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போய் சாப்பிடு.... நான் அண்ணன் சொல்லுறன் போ.... என அவர்களை சமாதனப்படுத்தினான் மதுஷன்.

இவை நடந்து இரண்டு மாதத்தின் பின் சாப்பாடு ஜீரணமாவதில்லை..... ஒரே சத்தி, வயிறு பொருமலாக இருக்கின்றது...என வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாரதிக்கு புற்று நோய் என வைத்தியர்கள் கூறினார்கள். இதையறிந்த மதுஷனும் அவனது தந்தையும் துடிதுடித்துப் போனார்கள்.



அவர்கள் யாருமே இப்படி நடக்கும் என எதிர் பார்க்கவில்லை.... எவ்வளவோ பணம் செலவழித்தும் நோய் குணமாகாத நிலையில் அவன் வீட்டில் படுத்த படுக்கையானான். துஷியின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் தாக்கப் பிடிக்க வேண்டிய நிலைக்கு ஆளான போது மதுஷன் அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்று ஒரு ஆள் வைத்துப் பார்த்தன்.

இடையில் சுரேன் போதை மருந்துகளுக்கும், போதைப் பொருட் களின் பாவனைகளுக்கும் ஆளாகி விட துஷி மதுஷனிடம் உதவிக்கு ஓடி வந்தாள். ஆனால், அவன் போதை மருந்துக்கு அடிமையாகி மனநோயாளி ஆகியதால் அங்கொடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டான்.

இவற்றை எல்லாம் பார்த்து சகிக்க முடியாமல், இனி எதையுமே தாங்கிக் கொள்ள முடியாத நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷி தற்கொலை செய்து கொள்ள பாரதியின் குழந்தைகளையும் மதுஷனே பாரமெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பாரதியின் நிலை கண்டு அவன் தந்தை அவன் செய்த குற்றங்களை மன்னித்து அவனை அன்போடு கவனித்தார். பாரதியின் குழந்தைகள் மதுஷனின் அன்பில் கவலைகள் மறந்தாலும் தம் தந்தையை வெறுப்போடு நோக்கினர்.

மதுஷனின் அன்பும் அவன் மனைவியின் பாசமும் பேரனின் அன்பு கலந்த கட்டுப்பாடுகளும் திரும்பவும் அக்குடும்பத்தை கட்டியெழுப்ப உதவின. 'பருவத்திலே பயிர் செய்' என்ற முதுமொழி அறிந்தும் பருவ காலத்திற்கு முன் பயிர் செய்து பெற்ற தரமற்ற அறுவடை தன் குடும்பத்தை இவ்வளவு தூரம் சீரழித்து விட்டதை உணர்ந்து ஓர் குற்றவாளியின் உணர்வோடு படுக்கையில் கிடந்தான் பாரதி.

சபீசன் - யாழ்ப்பாணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு மதங்களின் வழிகாட்டல்
# கிறிஸ்தவ சமயக் கண்ணோட்டம்

**இலங்கை நாட்டில் வாழ்வியல் யதார்த்தம் மதங்களின் தோல்வியா? அல்லது மதங்களைப் பின்பற்று கிறவர்களின் தோல்வியா?**

உலகத்திலே இருக்கக் கூடிய நான்கு உயர்ந்த மதங்களைக் கொண்டது இந்த நாடு. இப்படிப்பட்ட ஒரு நாட்டில் தான் வன்முறைகளும் அநீதிகளும் பாராபட்சங்களும் இன்று வரை தொடர்கதையாக உள்ளன. இந்த மதங்களின் போதனைகளும் படிப் பினைகளும் தோற்றுப் போய் விட்டனவா என்ற கேள்வி இன்று எழுகின்றது. நிச்சயமாக இது மதங்களின் தோல்வியல்ல மாறாக மதங்களைப் பின்பற்றுகிறவர்களின் தோல்வி தான்.



இன்று மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளால், குறிப்பாக சிறுபான்மை மதங்கள் எதிர் கொள்ளும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் இந்த நாட்டில் மதவாதம் தலைதூக்கியுள்ளதோ என்ற அச்சம், ஐயம், ஆதங்கம், நல்மனம் கொண்ட அனைவர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு சூழ்நிலையில் மதத்தலைவர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள் நமது வாழ்வை நமது செயற்பாடுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டியவர்களாக சுய விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டிய வர்களாக உள்ளோம்.

**மனித மனங்களில் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது**

இன்று இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று சொல்லப்பட்டாலும் யுத்தத்தின் சத்தங்கள் மட்டும் தான் இன்று இல்லை. துப்பாக்கி வேட்டுக்கள் இன்று ஓய்ந்துள்ளன. ஆனால் இன்னமும் ஓர் யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுதான் உள்ளார்ந்த யுத்தம் மனித மனங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த யுத்தத்தை நாம் எப்படி? எப்போது? நிறுத்தப்போகின்றோம்? எரிமலை ஒன்றை வெளியில் இருந்து பார்த்தால் அது அமைதியாக சாதாரணமாக நமக்குத் தெரியும்.

ஆனால், அது உள்ளே கனன்று கொண்டிருக்கும் குமுறிக் கொண்டிருக்கும் இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இன்று இந்த நாடு இருக்கின்றது. இந்த நாட்டில் மதங்கள், இனங்கள் உண்டு. தனிமனிதர்கள் இருக்கின்றனர். உள்ளத்தின் நிறைவில் இருந்தே வாய்பேசும் என்று யேசு சொன்னார் சமாதானம் என்பது வெளியில் இருந்து வருவதல்ல. அது உள்ளிருந்து வருவது. உள்ளத்தில் இருந்து வருவது. உள்ளத்தில் எது இருக்கின்றதோ அதவே உதட்டிலும் வெளிப்படும் அதுவே செயல்களிலும் எதிர் ஒலிக்கும்.

யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள் ஆகியும் உண்மையான சமாதானமும், ஒப்புரவும் இன்னும் இந்த நாட்டில் ஏன் ஏற்படவில்லை? யுத்தம் முடிந்த கையோடு நாம் என்ன நினைத்தோம்? இனி எல்லாம் சரியாகிவிடும், சமாதானம் சாத்தியம் ஆகிவிடும் என்று குதூகலித்தோம். ஆனால் நமது கனவுகள் இன்று வரை நனவாகவில்லை இது கவலை அளிக்கின்ற ஒரு சூழ்நிலையாகும்.

**எரியும் பிரச்சினைகள் பற்றிய எமது நிலைப்பாடு**


இன்று எரியும் பிரச்சனைகள் பல நம் அனைவரின் கவனத்தை வெகுவாக ஈர்த்துகொண்டு இருக்கின்றன. யுத்தத்தால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு, நிவாரணம், மீள்குடியேற்றம் போன்றவை அவசியமாக, அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளாகும். கடத்தப்பட்ட வர்களின் கதி, விசாரணை இன்றி தொடர்ந்து சிறைகளில்வாடும்அரசியல்கைதிகளின் நிலை போன்றவை நமது ஆழ்ந்த அக்கறைக்களுக்குரிய விடயங்களாக உள்ளன. போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள சுமூகமான சூழ்நிலையில் இடம்பெற்று வரும் கலசார சீரழிவு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை மிகவும் வேதனை அளிக்கும் விடயங்களாக விளங்குகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கான அரசியல் தீர்வு எட்டாக்கனியாக இருப்பது ஏமாற்றம் அளிக்கும் நிலையாக உள்ளது. இவ்விடயங்கள் இந்த நாட்டில் இருக்கக்கூடிய சமய, சமூகத்தலைவர்களின் கடமை பொறுப்பு என்ன என்ற கேள்வி எழுகின்றது. வெறுமனே கைகட்டி வாய் பொத்தி நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றோமா? அல்லது நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வலுவான சக்தியாக மாறி இந்நிலைமைகளை மாற்றி அமைக்க முயற்சி செய்யப்போகின்றோமா? அல்லது நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு வலுவான சக்தியாக மாறி இந்நிலைமைகளை மாற்றி அமைக்க முயற்சி செய்யப்போகின்றோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாதவிடத்து இன்னுமொரு யுத்த சூழ்நிலை இந்த நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.



## யுத்தத்தால் ஏற்பட்ட மனக் காயங்கள் ஆற்றப்பட வேண்டும்

யுத்தம் முடிவடைந்தாலும் யுத்தத்தால் ஏற்பட்ட மனக்காயங்கள் இன்று வரை எல்லா சமூகங்களிலும் உள்ளன. உயிர்இழப்பு, உடமைஇழப்பு, உடல் உறுப்புக்களின் இழப்பு என இழப்பின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. இந்த இழப்புக்களால் ஏற்பட்ட மனக்காயங்கள் இன்று வரை ஆற்றப்படவில்லை. அரசியல் வாதிகளின் ஆவேசப் பேச்சுக்கள், சந்தர்ப்பவாத பேச்சுக்கள் போன்ற வற்றால் சிலவேளைகளில் இந்த மனக்காயங்கள் பெரிதாகிக் கொண்டு செல்கின்ற சூழ்நிலையே உள்ளது. இந்த நிலையில் மக்கள் மனங்களில், சமூகங்களில் ஏற்பட்டுள்ள இவ்வாறான மனக்காயங்களை யார் ஆற்றுவது? இம்மனக்காயங்களுக்கு யார் மருந்திடுவது? இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அனைத்து சமூகங்களையும் சார்ந்த மதத் தலைவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். இந்தப் பணி காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

## சுயநலச் சுவர்களுக்குள் இருந்து வெளியே வரவேண்டும்

நாம் நம்மைப்பற்றி மட்டுமே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. ''தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்கும்'' என்ற தமிழ் பழமொழி ஒன்று உண்டு. மற்ற சமூகங்களின் பிரச்சனைகள், அபிலாசைகள், மன ஆதங்கங்கள் என்பவற்றை உள்ளார்ந்த அக்கறையோடு, கரிசனையோடு, நாம் அனுக வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும். "எனது மதம், எனது இனம், எனத சமூகம்" என்று மட்டுமே சிந்திக்கின்ற சுயநல சுவர்களுக்குள் இருந்து நாம் வெளியே வர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு மனநிலை மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் போதே இந்த நாட்டில் உண்மையான அமைதி, ஒப்புரவு சாத்தியமாகும்.

கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் போரில் இருந்து சமாதானத்தை நோக்கிய நிலைமாற்றம்

**"நீதி இன்றி அமைதி இல்லை"**

உண்மையான சமாதானம் நீதியின் மேல் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும். நீதி இன்றி சமாதானம் இல்லை. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு இதனை மிகவும் துல்லியமாக இவ்வாறு கூறுகின்றது. அமைதி என்றால் போர் நிகழாதிருக்கும் நிலமைமட்டுமல்ல ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளுக்கிடையே ஒரு சமநிலையைக் கொணர்வதிலும் அமைதியை அடக்கிவிட முடியாது. அடக்கியாளுகின்ற ஆட்சி முறையில் இருந்து பிறப்பதன்று அமைதி. மாறாக அமைதி என்றால் "நீதியால் விளைவது" என்றுரைப்பது மிகப்பொருத்தமானது.

சரியானது மனித சமுதாயத்திற்கு அடித்தளம் அமைத்தவரான கடவுள் அச்சமுதாயத்தில் ஓர் ஒழுங்கு முறையையும் பொறித்து வைத்தார். இந்த ஒழுங்கு முறையின் முதிர்ந்த கனியாக பிறப்பது தான் அமைதி ஆகும். நீதியை என்றும் அதிக நிறைவாக நாடித்தேடுகின்ற மனிதர்களால் மேற்கூறிய ஒழுங்கு முறை செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது" நாட்டில் உள்ள ஒவ்வொருவர்க்கும் உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் நீதியோடு நடத்தப்பட வேண்டும். அப்போது தான் அமைதி சாத்தியமாகும். நீதியை நிலைநாட்டாமல் அமைதியை ஏற்படுத்த முனைவது சாத்தியமாகாது.

**மற்றவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்**

நாம் ஒவ்வொருவரும் நம்மை எப்படி அன்பு செய்கிறோம். நம்மட்டில் எப்படியான அக்கறையைக் கொண்டிருக்கின்றோம் என்பது நமக்குத் தெரியும். என்னை மற்றவர் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் நானும் அந்த மதிப்பை மற்றவர்களுக்கு வழங்க வேண்டும். எனக்கு மற்றவர் ஊறுவிளைவிக்கக் கூடாது என நான் நினைத்தால் நானும் மற்றவர்களுக்கு ஊறுவிளைவிக்கக்க கூடாது. என்மட்டில் மற்றவர் பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டும் என நான் எதிர்பாத்தால் நானும் மற்றவர் மட்டில் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு என்மட்டில் நான் எதையெல்லாம் எதிர்பார்க்கின்றேனோ அவற்றையெல்லாம் மற்றவர்களுக்கும் நான் செய்ய வேண்டும். இயேசு வின் இந்த அடிப்படையான வார்த்தை ஒன்றை அனைவரும் கடைப் பிடித்தாலே போதும் இந்த உலகம் அமைதிப் பூங்காவாக திகழும். இதே கருத்தைத் தான் வத்திக்கான் சங்க ஏடும் எடுத்துக் காட்டுகின்றது.

"நாம் குறிப்பிடுகின்ற அமைதி உலகில் நிலவ வேண்டும் என்றால் மனிதரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். மனிதர்கள் தங்கள் அருள்நெறி வளங்களையும், படைப் பாற்றல் மிக்க திறமைகளையும் தங்களுக்குள்ளே மனமுவந்து, நம்பிக்கையோடு பகிர்ந்தகொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பிற மனிதர்களையும் மக்களினங்களையும் அவர்களுடைய மாண்பையும் உறுதிபடைத்த உள்ளத்தோடு மதித்தல் மற்றும் சகோதர உறவைப் பேரார்வத்துடன் கடைப்பிடித்தல் ஆகியவை அமைதியைக் கட்டியெழுப்ப மிகமிக இன்றியமையாதவை. இவ்வாறு அமைதியானது அன்பின் கனியாகவும் இருக்கின்றது. அன்போ நீதியால் எதை வழங்க முடியுமோ அதையும் விஞ்சிடும் தன்மையது"

மற்றவர்களுக்கு உரியவற்றைக் கொடுப்பது நீதி. ஆனால் மற்றவர்பால் நமக்கு உண்மையான அன்பு இருந்தால் மற்றவருக்கு உரியவற்றையும் விட மேலாக நாம் கொடுப்போம். இதைத்தான் "அன்போ நீதியால் எதை வழங்க முடியுமோ அதையும் விஞ்சிடும் தன்மையது" என்ற வார்த்தை எடுத்துக்காட்டுகின்றது. எங்கு சுயநலம் அதிகமாக இருக்கின்றதோ அங்கே அமைதி இருக்க முடியாது. பிறர் அன்பு இருக்கும் இடத்தில் தான் அமைதி இருக்க முடியும்.

"பிறர் அன்பிலிருந்து பிறப்பது தான் இவ்வுலகுசார் அமைதி, இந்த அமைதியானது தந்தையாம் கடவுளிடமிருந்து வருகின்ற கிறிஸ்து அளித்துள்ள அமைதியின் விளைவு. எனவே கிறிஸ்தவர்கள் அன்பின் அடிப்படையில் உண்மை பேசி'' உண்மையிலேயே அமைதி வழியைத் தழுவியுள்ள மனிதர்களோடு ஒன்று சேர்ந்து அமைதிக்காக வேண்டவும், அதை நிலைநாட்டவும் வேண்டும் என அழைக்கப்படுகின்றார்கள்.

### போருக்கான காரணங்களை இல்லா தொழிக்க வேண்டும்

இரண்டாம் வத்திகான் சங்க ஏடுகளில் ஒன்றாகிய 'இன்றைய உலகில் திருச்சபை' என்ற ஏட்டின் ஐந்தாவது இயலின் முதலாவது பிரிவு 'போர் நிகழாது தடுத்தல்' என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. இப்பகுதி போரின் தன்மை பற்றியும், அமைதியை நிலைநாட்ட வேண்டிய அவசியம் பற்றியும் பல கருத்துக்களை முன்வைக்கின்றது. 'போருக்கான மனிதத் தன்மையற்ற பண்புக்கு தடையமைத்தல்', 'முழுப்போர்', 'போர்க்கருவிகள் குவிப்பு', 'போரை முற்றிலும் தடைசெய்தல்', 'போரைத் தடுக்க அனைத்து நாட்டு முயற்சிகள்', ஆகிய உப தலைப்புக்களில் இங்கு கத்தோலிக்க திருச்சபையின் அதிகார பூர்வ கருத்துக்கள் பேசப்படுகின்றன.

"அமைதியைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் அதற்கு முதல் நிபந்தனை மனிதர்களிடையே நிலவும் பிணக்குகளுக்கான காரணங்களை வேரறுத்தல் ஆகும். இவையெல்லாம் குறிப்பாக அநீதிகள், போரை உரமிட்டு வளர்க்கின்றன. பொருளாதாரத்தில் நிலவுகின்ற பெரும் ஏற்றத் தாழ்வுகளும், இவற்றை ஒழித்திடத் தேவையான வழிவகைகளை விரைவாக செயற்படுத்தாமையும் மேற்கூறிய பிணக்குகள் எழுவதற்குப் பலவேளைகளிலும் காரணமாகின்றன.

**உதாரணமாக :-**

கடந்த 30 ஆண்டகளாக இலங்கை நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போருக்கான அடிப்படை காரணங்கள்: தமிழ்இளைஞர்களின்வேலைவாய்ப்புப் பிரச்சனை, பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல், சிங்களம் மட்டும் என்ற சட்டம், தமிழ்மொழியில் புறக்கணிக்கப்பட்டமை, தமிழர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் போன்றவையாகும். போர் முடிவுக்கு வந்த நிலையிலும் போருக்கான இந்தக் காரணங்கள் ஆராயப்பட்டு அவை தீர்க்கப்படாமல் இருப்பது துரதிஸ்ரமான நிலையாகும்.

போரை அடுத்துள்ள இன்றைய எரியும் பிரச்சனைகளான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சனை, படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டள்ள காணிகள் தொடர்பான விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை மீள் குடியேற்றம், போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம், போன்ற பிரச்சனைகள் இன்று வரை முழுமையாக தீர்க்கப் படாமல் இருக்கின்றன. இவை உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளாகும். அமைதியை ஏற்படுத்த வேண்டுமாயின் பிணக்கு களுக்கான இந்தக் காரணங்களைக் கண்டறிந்து இவற்றைத் தீர்ப்பது முக்கியமானதாகும்.

## அமைதிக்கான முயற்சி ஒரு தொடர் பயணம்

அமைதியை எற்படுத்தும் முயற்சி ஒரே இரவில் நடந்து முடியக்கூடிய ஒன்று அல்ல. மாறாக இது ஒரு தொடர் பயணம். ஏற்ற இறக்கங்களைக் கடந்தே இதை அடைய வேண்டும்.

"ஆகவே அமைதி என்பது உறுதியாக அடைந்துவிட்ட ஒன்றாக ஒரு போதும் இருப்பதில்லை. மாறாக இடையறாது கட்டி எழுப்பப்பட வேண்டிய ஒன்று. மேலும் மனித உள்ளம் வலுவற்றதாகவும் பாவத்தால் புண்பட்டதாகவும் உள்ளது. இவ்வாறிரப்பதனால் ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சிப் போக்குக்களைக் கட்டப்படுத்தினால் அன்றி, சட்ட முறையான ஆட்சியாளர்கள் விழிப்பாய் இருந்தாலன்றி அமைதியை நிலை நாட்டுவது இயலாத காரியம்"

**தேசிய சமாதானப் பேரவை - அறிக்கை**

## நிறைவுரை

"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்'' என இயேசு கூறுகின்றார். இயேசுவின் இந்த வார்த்தைகளை சிரமேற்கொண்டு கத்தோலிக்க திருச்சபையும் ஏனைய திருச்சபைகளும் அமைதியை ஏற்படத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை எடத்துவருகின்றது. கத்தோலிக்க திருச்சபையில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதலாம் திகதி உலக சமாதான தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இன்னாளில் உலக சமாதானத்திற்காக சிறப்பாக செபிக்கும் படி மக்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

போரின் கொடுமைகளை, அதன் விளைவுகளை இந்த நாட்டில் நாம் அனுபவித்துள்ளோம். ஊலகின் வெவ்வேறு பகுதிகளில் நடைபெறும் போரினால் எவ்வாறு மக்கள் துன்பப்படுகின்றனர் என்பதையும் நாளாந்தம் செய்திகள் வாயிலாக அறிகின்றோம். எனவே போரில் இருந்து சமாதானத்தை நோக்கிய நிலைமாற்றம் தொடர்பாக கிறிஸ்தவம் காட்டும் வழிமுறைகளைப் பின்பற்றி இந்த உலகை அமைதியின் உறைவிடமாக மாற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திர (வதை)க் கோலங்கள்



கோடிகள் கேட்டு - கும்மாளம் போடும்
கேடிகள் எல்லாம்
பேடிகள் [திருநங்கைகள்] என
கவிசூடியவனே....!



இருண்டு போன
திருமணச் சந்தையில் மருண்டது
மனைவி என்னும் நாடகமேடையில்
மாயத் தோற்றங்கள் !
அதுவும் கானல் நீரோட்டமே!
இனி - தோண்டவரும்
மனித எலும்புக் கூடுகள்
அடிவைக்கும் ஒவ்வொரு
அடிக்குள்ளும் மனிதமண்டை ஓடுகள்!



இணையாத சில நீரோடைகள்
துன்பம் என்ற வார்த்தையில்
துயில் கொள்ளாத சில போர்வைகள்
மாற்றத்தை தேடியும்
விடியாத அரசியல்
மணிசூடிய கிளட்டு உருவங்கள்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை என்னும் வேளையில்
கற்பனை கலையாத சில காட்சிகள்
உலகம் என்னும் மாளிகையில்
உயிருள்ள சில சடலங்கள் !
அன்பு என்னும் மொழியில்
அம்பாக சில வேதனைகள்
சோதனைகள் !
வேசங்கள் எத்தனை போட்டாலும்
வேதனை என்னவோ ஒன்று தான் !
கோஷங்கள் பல முழங்கிட
குனிய வைத்து விசில் அடித்தார் பலர்
ஒரு மனம் ஒன்று பட்டால் போல்
உயிருள்ள வரை!



சோதனை என்று வந்துவிட்டாள்
ஆயுள் குறைவது பொய்யல்ல.......!
வேதனையை தாங்கி
வெந்து போனது மெய்யல்ல...!



இயல்புடையவளாய் வாழும் பெண்ணே...!
மனைவி எனப்படுவாள்
இன்று உணர்ச்சிகள்,உரிமைகள்,
இரண்டிற்கும் கைவிலங்கிடப்படுகின்றார்கள் ..........?
ஆண்களா? பெண்களா?
பத்தோடு பதினொன்று
அத்தோடு
பெண்ணும் ஒன்று இரண்டு



இதயத்தில் - குடும்பத்தின் குழறுபடி
தலைசுத்திய கரகாட்டம் - இது
ஏர் பூட்டிய எருமைகள் போல
முட்டி மோதும் மனித
முண்டங்கள் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல் ஆக்கப்பட்டோர்கள்
எங்கே? என்பது
கண்கண்ட தெய்வத்திடம் - கேளீர் !
காணி பிணக்குகளின்
ஒப்பந்தம் முடிக்க - முன்னே
உரித்துடையோர்
மடிந்து போகின்றனர் !



இதற்கெல்லாம் என்ன - தீர்வோ?
யாதும் ஊரே யாவரும் கேளீர்
நன்மையும் தீமையும்
பிறரால் அல்ல !




இழப்பின் நதிகள் ஏற்படுத்திய
சித்திர [வதை]க் கோலங்கள்
பலபல வர்ணங்கள் - அது
வானவில் போல வட்டமிட்டு
வரும் பேய் ஆட்டங்கள்
இந்த மனித வாழ்க்கை !
யாரால் .......... யாரால்.......... இது
இந்த - அகதி
ஆயுத
நுளம்பு வாழ்க்கையிலும்
போதையும் மேலானது !
படைப்புழு ஆனது இன்று






பேனாவில் ஊற்றிவைத்தேன்
மக்களிடம் சிந்தும் இரத்தங்களை!
காண்பதெல்லாம் - பொய் நாடகங்கள்!
புகழுக்காய் புழுதி - கிளப்பும் மனித
மிருகங்கள் !

சுயி - தொழில்நுட்பக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணாதிக்க நெறிகளை பெண்கள் மீது திணிக்கும் மதவாதம்



சமூக நிறுவனங்களில் பல அடிப்படை சித்தாந்தங்களையும், விழுமியங்களையும் உள்ளடக்கிய நிறுவனங்களே, மதம் சார் நிறுவனங்களாகும். இம்மதத்தோடு இணைந்ததே கலாசாரம். எந்த மதமாயினும் அவைசார் குருமார் பெண்களின் ஒழுக்கம், ஆடை ஒழுங்குகள் பற்றியும் இவ்விதி முறைகளிலிருந்து மீறுதல் குறித்து விமர்சிப்பவர்களாகவே உள்ளனர். ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை பெண்கள் சமயதலங்கட்கு செல்வது அவர்கட்கு கிடைத்த ஒரே ஒரு சுதந்திரமாகும். ஆயினும், அதற்க்கு கூட சில விதிவிலக்குகளை ஆண்கள் வகுத்துள்ளனர். எந்தெந்த நாட்டங்களில் சமயதலங்கட்கு போகக்கூடாது என்பதெல்லாம் ஆண்களாலேயே வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு எந்த மதமும் விதிவிலக்கல்ல.

சீடோ சமவாயம் பெண்கள் இன மத ரீதியாக, உடல் உள ரீதியாக, எல்லா வகையிலும் பாரபட்சப் படுத்தலுக்குள்ளாக்குவது அவர்களது உரிமை மீறல் எனகாட்டுகின்றது. இச்சமவாயம் 1979 இல் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டு செயலாக்கமும் நடைமுறையிலுள்ளது குறிப்பிடத்தக்கது. பெண்கள் தாமாகவே, வீட்டு வேலைகளை செய்பவர்களாகவும், ஆண்களைசார்ந்து நடப்பவர்களாகவுமே உள்ளனர். இன்று வரை பெண்களை கட்டிக் காக்கும் பணியை நேர்முகமாகவோ அன்றி மறைமுகமாகவோ திறன்பட ஆண்கள் ஆற்றி வருகின்றனர்.

பெண்கள் இன்று பொது வாழ்வியல் முறைமைகளிலிருந்து, நகர்ந்து பொருளாதார முன்நிலைப்படுத்தலில் தம்மை ஈடுபடுத்தி வரும் இக்கால கட்டத்தில், மதம், கலாசாரம், அரசியல், வன்முறை என்ற போர்வையில் மீண்டும் அவர்கள் சுதந்திரம் பறிக்கப்பட்டு வீட்டுக்குள் முடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒடுக்குமுறை, வன்செயலற்ற வாழ்க்கை ஓர் ஜனநாயக நாட்டில் மேம்படுத்தப்படுமாயின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியோடு கூடிய சமாதானம், அன்பு என்பவற்றை மக்கள் தாமாகவே பகிர்ந்து கொள்வர்.



பெண்களது உடலும், ஆடையும் எப்போதும் சமயம் சார்ந்தாகவே அமைந்து விடுகிறது. குடும்பமோ, சமூகமோ, சமயத் தலைவர்களோ பெண்கள் கலாசார விழுமியங்களை அடையாளப்படுத்தி ஆடைகளினூடாக கலாசார விழுமியங்களை பேணவைப்பதாக காட்டுகின்றனர். 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்கம் ஒன்று கொழும்பு, மட்டக்களப்பு, நீர்கொழும்பு பகுதிகள் சார் தேவாலயங்கள், நட்சத்திர அந்தஸ்த்து கொண்ட விடுதிகளில் இடம் பெற்று நாட்டு மக்களை ஆறாதுயரில் மீண்டும் வீழ்த்தியுள்ளது. முள்ளிவாய்க்கால் பத்தாண்டு வலிகள் மாறாத நிலையில் மீண்டும் ஓர் தாக்குதல் இடம் பெற்றுள்ளதோடு மட்டுமின்றி அதனோடு இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மக்களை அச்சத்துள் தள்ளியுள்ளது.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலில் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் இஸ்லாமிய பெண்களே, தற்கொலைதாரர்களாக ஊடகத்தில் காட்டப்பட்டவர்கள் புர்க்காவோ அபாயாவோ அணிந்து வரவில்லை. மாறாக தம்மை நேரடியாக காண்பித்து, மேலைத்தேய ஆடைகளையே அணிந்திருந்தார்கள். அப்படியாயின் இஸ்லாமிய பெண்கள் அணியும் புர்க்காவிற்கு ஏன் இந்த தடை? இது மட்டுமா? குண்டுச் சத்தங்கள் செல்வீச்சுக்களினால் அதிர்ந்த எமது பிரதேசத்தில் அமைதிக்கான நகர்வுகள் துளிர்விடும் நிலையில் மீண்டும் புற்றீசல்கள் போல் சோதனைச் சாவடிகள், பெண்கள், சிறார், முதியோர் என பலரும் பிரயாணத்தின் போது இறக்கப்பட்டு சோதனை இடப்படுகின்றனர்?........ மக்களை அசௌகரியப்படுத்தும் பாதுகாப்பினால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கை, பொருளாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாது இயன்றளவு ஒதுங்கியிருக்கவே விரும்புவர்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய தேர்த் திருவிழாவின் போது பெண்கள் சேலை அணிந்து வரவேண்டும் என்ற வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வேறு



இந்துக்கோவில்களிலும் இச்செய்தி காலாகாலம் பத்திரிகைகளில் ஒழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களோடு இணைந்த செய்தியாக வெளி வருவதை காண முடிகின்றது. ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தரிசனத்திற்காக செல்பவர்கள் கூட தம்மை சேலை தலைப்பினால் மூடியபடி செல்வதும் ஓர் எழுதாத விதியாகவே இருந்து வருகின்றது.

பெண்கள் மதத்தின் பால் ஈர்க்கப்படுகின்றனரா? அல்லது மதம் பெண்களை ஈர்க்கின்றதா? என்ற கேள்விக்கப்பால் பெண்கள் சமய தலங்களுக்குச் சென்று வழிபடுவதன் மூலம் தமது உள மேம்பாட்டிற்கான ஓர் ஆற்றுப்படுத்தலை பெறுகின்றனர். சமய அனுட்டானங்கள் கிரியைகள் ஓர் அமைதியையும், சாந்தியையும், தெய்வீக தன்மையையும் கொடுக்கின்றன. ஆகவே மதத்தை வன்முறைகளோடு இணைத்துப் பார்க்காது தியானம், அன்பு, சாந்தி, என்ற பெறுமானங்களை நோக்காகக் கொண்டு பார்ப்பதில் சகலரும் பேணிக் கொள்வது அவசியமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம்



சமமான சிந்தனைகளோடு புதிதான மாற்றங்களை கட்டி எழுப்புவதற்கான தினம் சர்வதேச மகளிர் தினம். சர்வதேச மகளிர் தினம் உலகளாவிய ரீதியில் வருடா வருடம் மிக உன்னதமாக கொண்டாடப்படும் தினமாகும். ஐ.நா இத்தினத்தை பெண்கள் கண்டு கொண்ட வெற்றிப்பாதைகள், சமூக மாற்றங்கட்கான வழிமுறைகள் போன்ற முன்னேற்றமான செயற்பாடுகளுடன் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வோர் கிராமத்திலும் காத்திரமான பெண்கள் தமது எண்ணக்கருக்களை ஆர்வத்துடன் செயற்படுத்தி வெற்றி கொண்ட நாளாகவும் இத்தினத்தை நினைவு கூறுகின்றனர்.

சமமான சிந்தனை, உன்னதமான கட்டமைப்பு, மாற்றத்திற்கான புதிய வழிமுறைகள் என்ற ஐ.நாவின் வழிகாட்டலில்ஒவ்வொரு நாடுகளிலும் தத்தமக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள கருப்பொருளில் இத்தினத்தை கொண்டாடி வருகின்றனர்.


2019ஆம் ஆண்டின் கருப்பொருளை மையமாகக் கொண்டு மாற்றுமுறைகளில் பெண்களுக்கான சமத்துவம், ஆற்றல், மேம்பாட்டுத் திட்டங்களை சமூக பாதுகாப்பு எல்லைக்குள் செயற்படுத்துவது பற்றி மேலும் ஓர்படி முன்சென்று பெண்களை வலுப்படுத்தும் நோக்கமாக அமைகின்றது.

புதுமையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் குறிப்பாக பெண்கள் தற்போதைய தொழில்நுட்ப மற்றும் நவீனத்துவ உலகில், தொழில் நுட்பத்தை எப்படியாக பயன்படுத்திக் கொள்வது என்பதில் ஆர்வம் காட்ட முயலவேண்டும். பெண்கள் நவீன தொழில்நுட்பத்தோடு இணைய வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. பெண்கள், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், காகிதம், வரைபடம் தயாரித்தல் போன்றதுறைகட்குள் சமத்துவமாக இணையவில்லை. சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு இத்திறன்சார் தொழில்கள் பெண்களுக்கு முன்னேற்றமான வழிவகைகட்கும், சமத்துவத்திற்கும், புத்தாக்க சிந்தனைகட்கும் வழிவகுக்கும்.

2019இல் முக்கிய கருப்பொருளாக ஐ.நாவின் 63வது பெண்கள் சமூக அந்தஸ்து தொடர்பான தொடரில் தொழில்சார், தலைவர்கள், சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைவினையாளர்கள், பால்நிலை சமத்துவ செயற்பாட்டார்கள் பெண்கள் தொடர்பான நவீன சிந்தனையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பெண்களை புதிய வகை மாற்றங்களையும் அவற்றிற்கான தடைகள் போன்றவற்றையும் ஆராய்ந்ததுடன் இவ் வகையான திறன்களை எவ்வாறு வளர்த்தெடுப்பது பற்றியும் ஆராய்ந்துள்ளனர்.


மிகமுக்கியமாக 2030ஆம் ஆண்டிற்கான நிலையான அபிவிருத்தி இலக்குகள் ஐ.நா வினால் முன்மொழியப்பட்ட நிலையில் இவ்விலக்குகள் பால் நிலை சமத்துவம், பெண்கள் ஆக்கத் திறன்கள் வலுவூட்டல் தொடர்பான செயற்பாடுகட்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

**மகளிர் குழு** - சர்வதேச மகளிர் தினம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் ஆண்

# நியதி



வன்முறையும்
வன்செயலும்
பெண்களின்
சொத்துக்கள் அல்ல ...!
ஆண் ஆதிக்கமும்
அடக்கு முறையும்
ஆண்களின் ஏக போக
உரிமையும் அல்ல ....!
மன வேதனையும்
விரக்தியும் இருவருக்கும்
இருவரால் எப்போதும்
ஏற்படுவதொன்றே.....!
அனைத்தையும்
ஒருவர் மேல் திணிப்பது
நியாயம் அல்ல.....!

மதுஷன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கு மதங்களின் வழிகாட்டல்

## இந்து சமயக் கண்ணோட்டம்



இலங்கை எங்கள் தாய் நாடு என்று பாடிய பாடல் நம் நினைவில் தங்கியுள்ளது. 30 வருடகால யுத்தம் ஓய்ந்தாலும் அந்த யுத்தங்களின் வடுக்கள் மாறாத நிலையிலே சமயங்கள் தங்களின் நோக்கில் சாமாதானத்தை எப்படிப் பார்க்கின்றன? இதன் ஊடாக சமயங்கள் உண்மையிலே சமாதானத்தைப் போதித்து நிற்கின்றனவா? என்பது பற்றியெல்லாம் விளக்கத் தோன்றுகிறது.

உண்மையிலே இக்கட்டுரையின் ஆழமும் அகலமும் கருத்துக்களும் அகலமானவை. ஏனெனில் ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு நிமிடமும் காலச்சூழல் மாற்றத்திற்கு ஏற்ப உலகம் மாறிக்கொண்டு இருந்த வேளையில் எங்களது நாடும் அதற்கு விதிவிலக்கல்ல. இரத்தக் கறைகளாலும் யுத்த அவலங்களாலும் தொடுக்கப்பட்ட கணைகளால் காயங்களில் இருந்து எமது மக்கள் முற்று முழுதாக மீளவில்லை.

"அன்பு என்ற ஆயுதத்தைக் கைக்கொள்ளுங்கள் "எல்லோரும் இன்புற்றிருக்க அல்லாமல் வேறேதும் அறியேன் பராபரனே". என்ற தாயுமான சுவாமிகளுடைய பிறருக்கு உதவ வேண்டும் என்ற நல்ல கொள்கையினைக் கடைப்பிடியுங்கள். ''அறம் செயவிரும்பு அறுவது சினம்'' என்ற ஔவையாரின் வாக்கினைக் கொண்டு கோபத்தை அடக்கி நல்ல தர்மங்களை செய்யுங்கள் என்ற நோக்கில் ஒவ்வொரு துறையாக, ஒவ்வொரு கோணத்திலே சமயங்கள் சமாதானத்தை விதைக்கின்றன.

முதலில் மனிதர்களை மனிதம் நிறைந்தவர்களாக ஆக்கத் தோன்றுகின்றது. சமயங்கள் தங்களுடைய மகாவாக்கியம், தர்மங்கள். நெறிகளால் கூறப்பட்ட விடயங்களை வெறுமனே தெட்ட தெளிவாகக் கூறியிருந்தாலும் பரவாயில்லை. அவ்வாறு கூறப்பட்ட விடயங்களின் கருத்தாழம் சொற்களின் செழுமையை மக்களிடையே கொண்டு சேர்ப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### யுத்தத்தின் பின்னர் சமயங்களின் பார்வையில் சமாதானம்.

கடந்த ஒரு தசாப்த காலமாக சமாதானம் என்ற சொற்பதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலராலும் பல இடங்களில் பேசப்பட்டு வருகின்றது. சமாதானம் நான்கு நிலைகளில் செல்வாக்கு செலுத்துவதனைக் காணலாம். பொருளாதார, அரசியல், சமூக ஒற்றுமை, எதிர் - எதிர் தரப்புகள் போன்ற விடயங்களில் சமாதானம் செல்வாக்கு செலுத்துவதனைக் காணலாம்.

**யுத்தத்தின் வடுக்கள்**

*30* ஆண்டுகளாக இடம்பெற்ற யுத்தம் முடித்து சமாதானம் என்ற சொல்லானது எங்கும் வியாபித்து இருந்தாலும், அது வெறும் சொல்லளவிலேயே இருந்து வருகிறது. இதற்கான காரணம் என்ன என்பது பற்றி சிந்திப்போம்.

1. மனம் சோர்வடைந்து காணப் படுதல்

   யுத்தத்தின் போது அதிக இடம்பெயர்வுகள், குறிப்பாக கருத்துச் சுதந்திரம் பாதிப்பு போன்ற காரணங்களினால் சமாதானம் கிடைத்தாலென்ன? கிடைக்காவிட்டால் என்ன? என்ற மனோபாவம்.

2. இழப்புகளை ஈடுசெய்ய முடியாமை

   யுத்த வெற்றிகள் காணப்பட்டாலும், பாதிக்கப்பட்டவர்கள் தமது உறவுகளையும், உடமைகளையும் இழந்துள்ளமையால், அவற்றிலிருந்து மீள முடியாமை.

3. நீதி வேண்டி நிற்றல்

   குறிப்பாக காணமல் போன உறவுகளை தேடியும் அது தொடர்பாக தமக்கு நீதி கிடைக்குமென்ற எதிர்பார்ப்பும்.

4. மீள் புனரமைப்புப் பணிகளில் ஏற்பட்ட தாமதம்

   மீள் புனரமைப்புப் பணிகள் மெதுவாக இடம்பெறல் காரணமாக மக்கள் விசனமடைதல்.


5. உடல், உளரீதியான பாதிப்புக்கள்.

   யுத்தத்தின்போது அங்கவீனமாதல், உடலுறுப்பு இழப்பு என்பவற்றால் மனவளர்ச்சிப் பாதிப்புக்கள்.

மேற்படி விடயங்கள் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளன. இவற்றில் இருந்து, துரிதமாக மக்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவர எம்மால் முடியாமை காரணமாக, சமாதானம் என்ற எண்ணக்கருவை ஒவ்வொரு தனிமனிதன் உள்ளத்திலும் விதைப்பதில் உள்ள சிரமம். அடுத்து இன்று இலங்கையில் தோற்றம் பெற்ற சமய நிறுவனங்களைப் பார்ப்போம். அவை இந்து ஆலயங்களாக, பௌத்த விகாரைகளாக, கிறிஸ்த்தவ தேவாலயங்களாக இஸ்லாம் பள்ளிவாசல்களாக இருக்கலாம். இவற்றின் மூலம் அன்பையும் அதனோடு இணைந்த சீரிய ஒழுக்கவியலையும் கற்றுக்கொள்ள முடியும். இச்சந்தர்ப்பத்திலே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதமானத்தை சமயங்கள் மூலமாக விதைக்க எண்ணுகின்றார்கள்.

அதை எப்படி செய்கின்றார்கள்? பணிவு, விருந்தோம்பல், பெரியோரை கனம் பண்ணல், பிறருக்கு உதவுதல் போன்ற கருத்துக்களை மனித மனங்களில் விதைப்பதில் சமயங்கள் அதிக அக்கறையுடன் செயற்படுவதனை காணலாம்.

இவை அனைத்தையும் சரியாக பேணும்இடத்தில்எமக்குள்ஓர்ஒற்றமை ஏற்படும். ஒற்றுமை, சமாதானம் என்ற இலக்குகளை அடைவதற்கு இவை சிகர புள்ளிகள் ஆகும். இப்படியான செயல்முறையினை சமயங்கள் எடுத்துக் கூறுகின்றன. நேரடியாக மக்களிடையே இக்கருத்தைகொண்டுசெல்லசமயங்கள் முயல்கின்றன. இவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் கொண்டு செல்லப்படுகின்றன.

- மறப்போம், மன்னிப்போம், நடந்தவையெல்லாம் நடந்து முடிந்து விட்டன.

நேற்றும் நாளையும் எங்களுடைய கையில் இல்லை.

இன்று மட்டும் அதுவும் இந்த விநாடியே எம் கையில் உள்ளது.

ஆகவே, சமயங்கள் மேற்கூறிய வாறாக இனிய குணங்களை நல்ல முறையிலே எடுத்துக் கூற வேண்டும் என்பதே இறுதியான கருத்து. சமயங்கள் தங்களுடைய பணியினை மேலும் விஸ்தாரிக்குமிடத்து சுபீட்சமான வாழ்வினை எட்டலாம் என்றால் மிகையாகாது. அன்பே சிவம், அன்பே இறைவன், உயிர்களிடத்து அன்பு செலுத்துவது போன்ற தர்ம கருத்துக்களை இந்துமதம் ஒருபடி மேலே நின்று ஆழமாக எடுத்து இயம்புகிறது. பசு, மயில், பாம்பு, கருடன் போன்ற விலங்குகளை தெய்வாம்சமாக ஜீவகாருண்யத்துடன் காண்பது இந்து மதத்தின் சிறப்பினைக் காட்டுகிறது.

அதுமட்டுமல்லாமல் நீதியின் சிறப்புக்கு, மனுநீதிகண்ட சோழனு டைய வரலாற்றில், பசுவின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்திற்காக தனது மகனையே கொன்று, நீதியை நிலைநாட்டிய வரலாறு இந்துக்களுக்கு உண்டு. ஆகவே, சமரசக் கொள்கையின் அடிப்படையினை எப்பொழுதும் இந்துமதம் விளக்கத் தவறவில்லை. இவ்வாறாக சமயங்கள் அமைதி, சாந்தம் என்பவற்றையே விரும்புகின்றன. இதனையே அனைத்து மதங்களும் போதிக்கின்றன.. வெறுமனவே போதனையோடு நின்றுவிடாமல் யுத்தத்தின் காயங்களைச் சுமந்து வாழும் மக்களுக்கான அருமருந்தாக சமய நிறுவனங்கள் செயற்படுகின்றன. சூழமைவு கருதி பணியாற்ற வேண்டியிருப்பது காலத்தின் தேவையாக உள்ளது. அவ்வாறு செய்யும் பணிகள் மூலமே அவர்களது துயரில் இருந்து சற்றேனும் எம்மால் பாதிக்கப்பட்டவர்களை விடுவிக்க முடியும்.

இவ்வாறு சமய நிறுவனங்கள் மக்களுக்கு ஆற்றக்கூடிய பணிகளை நாம் வகைப்படுத்துவோம்

1. உளம் சார்ந்த பணிகள்
2. பௌதீக வளம் சார்ந்த நலனோம்புப் பணிகள்
3. மீளிணக்கப் பணிகள்

இவ்வாறான வகைப்படுத்தலின் உப பிரிவுகளை நாம் நோக்குவோம்.

1. உளம் சார்ந்து அவர்களை ஆற்றுப்படுத்தல்

- இதில் பாதிப்புக்கு உள்ளான மக்களின் மன அமைதிக்கு தியானப் பயிற்சி, நீதிக்கதைகள், வழிபாடு, சுற்றுலா போன்ற படிமுறை நிகழ்வுகள் மூலம் மெதுவாக உளக்காயங்களிலிருந்து வெளிக்கொணர்ந்து அவர்களை மகிழ்ச்சிகரமான மனிதர்களாக மாற்ற முடியும்
- உளவள ஆலோசகர்களது வழிகாட்டிக் கருத்தரங்குகள்
- குழுவாகச் சேர்ந்து செயற்படும் திருவிழா, கொண்டாட்டம், பண்டிகை, விளையாட்டுப் போட்டிகள், போன்ற படிமுறைச் செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் அவர்களை இவற்றில் இருந்து மீளமைக்க முடியும்.

2. பௌதீக வளம் சார்ந்த நலனோம்புப் பணிகள்

- அத்தியாவசிய தேவைகளான வீடு, உணவு போன்ற வளங்கள் கிடைப்பதற்கான வழிமுறைகளை விரைவுபடுத்தி செயற்படுத்தல்
- அவர்கள் இழந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள், சிறு குடிசைக் கைத்தொழில், விவசாயம், வியாபாரம், போன்ற செயற்பாடுளுக்கு அவர்களுக்கு ஆலோசனை ஆதரவு வழங்குதல்
- பாடசாலை கற்றல் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தல்
- தொழில்நுட்ப தொடர்பாடல் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

இவ்வாறான நடவடிக்கைகள் அவர்களை மீண்டும் புத்துயிர் பெறவைக்கும் செயற்பாடுகளாகும்.

3. மீளிணக்கப் பணிகள்

- சமூகக் குழுக்களை சிறுவர், இளைஞர், பெண்கள், முதியோர், ஆண்கள் ஊடாக சமயங்களுக்கிடையிலான / இனங்களுக்கிடையிலான நல்லிணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சமூகரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பு ஒன்றை மக்கள் மயப்படுத்தல்

- மீளிணக்கச் செயற்பாட்டினை மேலும் விஸ்தரிக்க சமயங்களுக்கு இடையிலான கருத்தாடல் நிலையங்களை உருவாக்குதல்
- தேசிய மட்டத்தில் சமயங்களின் கூட்டு நிலையம் ஒன்றை நிறுவுவதன் மூலம் இன மத ரீதியான முரண்பாடுகளை குறைப்பதன் ஊடாக மீளிணக் கத்தைத் தேசிய ரீதியில் கட்டி யெழுப்புதல்
- சுக வாழ்விற்கு அவசியமான சமத்துவத்தைப் பேணுவதற்காக சிறந்த சமூகத்தை அல்லது சுபீட்சமான எதிர்கால இலங்கையை உருவாக்குவதற்காக அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை மேற்கொள்ளுதல்
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்கள், பெண்கள், கணவனை இழந்த விதவைகள், இளைஞர்கள், யுவதிகளுக்கான வழிகாட்டல் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தி அவர்களுக்கு வழங்குதல்
- மும்மொழிக்கொள்கையினை கட்டமைப்பு ரீதியாக வளப்படுத்தி வருவதன் மூலம் முரண்பாடுகள் ஏற்படாமல் சகவாழ்வினை ஏற்படுத்தும் செயற்பாடாக அமைத்தல்
- நாட்டின் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.
- உணர்வு பூர்வமாக யாரையும் காயப்படுத்தல் ஆகாது
- ஒவ்வொரு சமய விழாக்கள் கொண்டாட்டங்களில் ஏனைய சமயத் தலைவர்களை, மக்களை அழைத்து பங்கேற்பாடு செய்தல்
- யுத்தத்திற்குள்ளான சிறுவர்களை ஆற்றுப்படுத்தி முரண்பாடுகள் அற்றவண்ணம் உரிமைகளைப் பாதுகாத்தல்
- அனைத்து சமயங்களையும் உள்ளடக்கிய சிறுவர் குழுக்களை ஆரம்பித்து ஏற்புடைய நிகழ்வுகளை செயற்படுத்தல்
- ஒவ்வொரு சமயப்பாடப் புத்தகத்திலும் ஏனைய சமயங்களைப்பற்றிய ஒரு சிறிய குறிப்பினைப் பதிவு செய்தல்
- சமயங்களுக்கிடையே ஏற்படும் சமயப் பிணக்குகளை உடனடியாக தீர்க்கும் வண்ணம் அதிகாரம் உள்ள ஓர் அமைப்பு அரச ரீதியில் உருவாக்கப்பட வேண்டும்.
- முக்கியமாக வறுமையின் பிடியில் உள்ள சமயக்குழுவினரை மையப்படுத்தி ஏனைய சில பிரிவினரால் மேற்கொள்ளப்படுவதாக அறியப் படும் சமயப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக விரைந்து தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அனைத்து சமயங்களுக்கும் சமமான வகையில் சமய சுதந்திரத்தினைப் பேணும் வண்ணம் நீதியான ஓர் பிரகடத்தினை அல்லது கொள்கையினை ஏற்படுத்தல்
- இடம் பெயர்ந்துள்ள மக்களை அவர்களுடைய பூர்வீகமான இடங்களில் மீளக்குடியேற்றல், சமயவழிபாட்டினை குந்தகமின்றி தொடரவும் வழியினை ஏற்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமய சமரசத்தினை முன்னிலைப் படுத்தி ஊடகங்களின் செயற்பாடுகள் அமைவதை உறுதி செய்தல்
- கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களோடு இளைஞர் யுவதிகள், பெரியோர் அனைவரையும் இனம்கண்டு அவர்களுக்கான கல்வி வேலை வாய்ப்பு, வாழ்வாதாரத் திட்டங் களைச் செயற்படுத்தல்
- அனைத்து சமயத்தவர்களினதும், தனித்துவம், கலை, கலாசாரம் போன்றவற்றை மேற்படுத் துவதுடன் இவற்றிற்கு ஒரு பொதுவான இடத்தினையும் அறிமுகம் செய்தல் வேண்டும்.
- எழுத்தாற்றல், படைப்பாற்றல் என்பவை இனங்காணப்பட்டு ஊக்குவிப்பு செய்யப்பட வேண்டும்.
- முக்கியமாக மாணவர்களை மையப்படுத்தி கல்வியுடன் சமய, சமூக நல்லிணக்கம்பற்றிய அறிவினை விருத்தி செய்யும் வகையில் செயற்திட்டங்களை அமைத்தல்.

தகவல் - சமாதானப் பேரவை

- மாணவர்கள், இளைஞர்கள் யுவதிகள் ஆகியோரை ஒன்று சேர்த்து அவர்களை சமய, சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் உந்துதலுடன் செயற்பட வழி ஏற்படுத்தல்.
- அடிப்படை உரிமைமீறல் இடம்பெறுமேயானால் (சமய, சமூக ரீதியில்) உரிய தீர்வினை உரிய வகையில் விரைவில் பெற்றுக்கொடுத்தல்

நிறைவாக 30 வருட யுத்தத்தின் பின்னர் சமயங்களின் பார்வையில் சமாதானம் எனும் நோக்கத்தினை பார்க்கும்போது மேற்குறித்த விடயங்கள் தொடர்ந்தும் விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வெறுமனே அச்சடித்த கடதாசிக்கு மாத்திரம் அவற்றை வரையறுக்காமல், அரசு விரைந்து, உறுதியுடன் செயற்படுத்த வேண்டும். இவ்வாறான ஒரு செயற்பாடு இடம்பெற்றால் தான் நாம் எமது நிலையான இலக்கினை அடைந்திட முடியும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்"

தென்னிந்நியாவின் பூவரசி அறக்கட்டளை பல்துறை ஆளுமை பாலு மகேந்திரா விருதுக்காக இம்முறை வன்னிமகள் சஞ்சிகாவை பரிந்துரைத்துள்ளது. நமக்கெல்லாம் பெருமையான விடயம் சஞ்சிகாவை நான் முதல் முதலில் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பான மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்கில் தான் சந்தித்தேன். பார்த்தவுடன் சிநேகம் கொள்ளத்தூண்டும் முகம்....... கொஞ்ச நாட்கள் கழித்து யாழ்ப்பாணத்தின் திரையரங்கொன்றில் ''நெருஞ்சில் முள்'' திரைப்படத்தில் அதே முகம் ஆனால் கண்களில் நீரோடு.... முகநூலில் சுவாசமே சுடுகலனாய் என்ற கவிதைத்தொகுப்பில் தன்னை எல்லோருக்கும் அறிமுகம் செய்து கொண்ட போது அதே முகத்தில் ஆளுமையும் கம்பீரமும் இன்னும் அதிகரித்திருந்ததாகப்பட்டது. விருது பெற்ற சந்தோஷத்தில் இன்னும் அழகாய் புன்னகைத்த வன்னிமகளிடம் நங்கை இதழுக்காக கண்ட நேர்காணல்.

**கேள்வி :-** வன்னிமகள் சஞ்சிகா தாரணி என்ற புனைப்பெயரில் உங்களை எங்களுக்குத் தெரியும். உங்கள் பூர்வீகம் பற்றி எங்களுக்காக ........

லதா கந்தையா தான் எனது இயற்பெயர் யுத்தத்தால் சிறுவயதில் எனது அம்மாவை இழந்த பின் செஞ்சோலையில் தான் வளர்ந்தேன் அங்கு தான் எனது படைப்புக்கான ஆர்வம் வித்திடப்பட்டது. பின்னர் தமிழ் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்றேன். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக நான் மூன்று பிள்ளைகளின் தாய் இருப்பினும் யுத்தம் எனது ஒரு பிள்ளையை என்னிடம் இருந்து பிரித்துவிட்டது. அதுவே இன்று பெண்தலைமைத்தவ குடும்பமாய் எங்களை மாற்றியமைத்துவிட்டது. இறுதியுத்தத்தில் எல்லோரையும் போல நானும் எல்லா கஷ்ரங்களையும் இழப்புக்களையும் தாண்டி வந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி :- உங்கள் எழுத்துலக பிரவேசம் எப்பொழுது ஆரம்பமானது?

எனது பன்னிரெண்டாவது வயதில் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியிட்ட விடுதலை கனல் என்னும் கவிதைத் தொகுப்பே எனது எழுத்துலகத்தின் அடையாளம் இருந்தாலும் என் எழுத்துலகப் பயணம் அதற்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டது எனலாம். அது ஒரு சுவார்சமான சம்பவம். ஒருமுறை எனது வகுப்பாசிரியர் என்னைக்கூப்பிட்டு தான் எழுதிய கவிதை ஒன்றை வாசிக்கும் படி கேட்டார். ஏற்கனவே செஞ்சோலையின் ஆண்டு விழாவிற்கென பரதம், நாடகம் என பல நிகழ்வுகளுக்காக என்னை தயார்படுத்தி கலைப்பாக இருந்தால் "உங்களுக்கு நான் மட்டுமா கண்ணுக்குத் தெரியிறேன்?" என்று கேட்டுவிட்டேன் எழுதத்தான் தெரியாது என்னால் எழுதித்தந்தால் வாசிக்கவும் தெரியாதா? எனக் கோபமாக கேட்டு உடனே ஒரு கவிதை எழுதினேன்.

கேள்வி :- அந்த கவிதையை நினைவுக்குக் கொண்டு வர முடியுமா?

நிச்சயமாக. சிறுவர்களே!
செஞ்சோலை சிறுவர்களே!
ஓடி வாருங்கள் ஓடி வாருங்கள்
தாய் நாடுதனை மீட்க......
உங்களுக்கும் பங்குண்டு
ஓடிவாருங்கள் !

பேனா என்னும் துப்பாக்கி பிடித்தொரு புரட்சி செய்வோம் ஓடி வாருங்கள் என்று இந்த சிறுபிள்ளையின் கவிதைக்கு ஆசிரியர் தட்டிக்கொடுத்த பாராட்டு தான் என்னை தொடர்ந்தும் எழுத தூண்டியுள்ளது எனலாம்.

கேள்வி :- ஊடகத்துறையில் உங்களது பயணம் பற்றி ?

புதுவிதி, எதிரொலி, தமிழருள் பதிவு போன்ற இணைய தளங்களுக்கு எழுதுகின்றேன் சமூகம் சார்ந்த பிரச்சனைகள் பற்றியும் அதிகமாக பதிவிடுகின்றேன்.

கேள்வி :- பெண்தலைமைத்துவ குடும்பமாக இருப்பதால் பெரும்பாண்மையான உங்கள் குடும்பச் சுமையை நீங்களே சுமக்க வேண்டியிருக்கும் அதனை எப்படி சமாளிக்கின்றீர்கள்?

எழுத்துத்தான் எனது பிரதான தொழில் இவற்றைவிட வெளி நாட்டிற்கு திருமணம் செய்யச் செல்லும் பெண்களுக்கு ஆங்கில வகுப்புக்கள் எடுக்கின்றேன். அதைவிட தோட்டம் செய்வதில் ஆர்வம் உண்டு. காய்கறி தோட்டம் செய்வதிலும் ஈடுபடுகின்றேன்.

கேள்வி :- உங்களுக்கு வரும் சமூகம் சார்ந்த நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்கின்றீர்கள்?

பொதுவாக எந்தத்துறையிலும் பெண்களுக்கு நெருக்கடிகள் தான் அதிகம் இருந்தாலும் பெண்கள் ஆகிய நாம் ஒரு குழந்தையை எவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமாக வளர்க்கின்றோமோ அது போலவே நாம் ஈடுபடுகின்ற துறைசார்ந்து பக்குவமாக நாம் செயற்பட்டால் எமது நெருக்கடிகளை நாம் இலகுவாக கையாளலாம். ஒரு நெருக்கடியை பெரிதாக நினைப்பதே நமக்கு அதீத அழுத்தத்தை தரும் சில சந்தர்ப்பங்களை சில விடயங்களை கணக்கெடுப்பதே இல்லை. உண்மையில் அச்சந்தர்ப்பங்களில் எனக்கு காது கேட்பதும் இல்லை. (சிரிக்கிறார்).......

கேள்வி :- பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றிய உங்களின் கருத்து?

அது ஆரோக்கியமானது ஆனாலும் அவை சரியான முறையில் சரியான தேர்வில் நடைமுறைப்படத்தப்பட வேண்டும். நானும் குறித்த ஒரு கட்சி சார்ந்து அரசியலில் ஈடுபட்டேன். அதில் திறம்பட செயலாற்றிய போதும் அதற்கான அடையாளம் எனக்குத் தரப்படவில்லை. இவ்வாறு சரியான முறையில் பணியாற்றும் பெண்கள் அரசியலில் ஈடுபடமுனையும் போது அதை அனைவரும் ஊக்கப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் பெண்களின் அரசியல் தேர்வு தவறான பாதையாகிவிடலாம்.

கேள்வி :- சுவாசமே சுடுகலனாய் என்ற உங்களின் கன்னிப்படைப்பைப் பற்றி சொல்லுங்கள்?

உண்மையில் விடுதலைக்கனல் என்ற கையெழுத்துச் சஞ்சிகையே எனது முதலாவது படைப்பு இருப்பினும் அச்சுப்பிரதியாக வெளிவந்த “சுவாசமே சுடுகலனாய்'' என்ற கவிதை நூல் எனக்கான அடையாளத்தை இன்னும் ஆழமாக்கியுள்ளது எனலாம். இதில் மொத்தமாக எழுபத்தியொரு கவிதை தொகுப்புக்கள் உள்ளன. பல்வேறுபட்ட பாடுபொருட்களில் என்னை பாதித்த விடயங்களை பகிர்ந்துள்ளேன். நீதியின் குரலாய், இயலாமையின் குரலாய், ஏக்கத்தின் குரலாய், விரத்தியின் குரலாய் என்னுடைய கவிதைகள் உங்களிடம் பேசும் என நம்புகின்றேன். இவை எனது மண்ணில் கண்களால் நான் கண்டவற்றை சாட்சிகளாக்கி அவற்றை வார்தைகளால் வடித்துள்ளேன்.

கேள்வி :- உங்கள் கவிதைகள் வேறு எங்குபிரசுரமாகியுள்ளது?

தமிழரின் நெற்பதிவு இணையம், சுடரொளி, தெளிவு போன்றவற்றில் பிரசுரமாகியுள்ளன. பல கவிதைகள் எனது முகநூல் பக்கத்தில் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன.

கேள்வி :- நெருஞ்சி முள் திரைப் படத்தில் நடந்த அனுபவம்

நெருஞ்சி முள்ளின் கதைக்கரு காணாமல் போன ஒருவரின் மனைவியும், பிள்ளைகளும் படும் துன்பங்கள் இக்கதை ஏனோ இதயத்திற்கு நெருக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் இதன் இயக்குனர் டென்மார்க் அண் அவர்களை சந்தித்த போது படக்கதையொன்றை எழுதித் தரும்படியே கேட்டேன். பின்னர் தான் இக்கதைக்குப் பொருத்தமாக நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக கருதி நடிக்கச் சொல்லிக் கேட்டபோது ஒத்துக்கொண்டேன்.

கேள்வி :- உங்கள் கலையுலக பயணத்திற்கு உங்கள் குடும்பத்தினரின் ஒத்துழைப்பு பற்றி?

எனது மகன் தான் எனது எல்லா படைப்பின் ரசிகனும் விமர்சகனும் கூட உண்மையில் ஒரு தாய் தன்னுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டிருந்தால் அவள் தனது பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை காட்ட முடியும்.

கேள்வி :- வளர்ந்து வரும் இளம் தலைமுறை பெண்களுக்கு தங்களின் கருத்து?

முதலில் பெண்கள் எப்போதும் நம்மையாராவது கைதூக்கிவிடுவார்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டு நாமாகவே சில திட்டங்களில் அல்லது விடயங்களில் முன்னேறுவதற்கு முயற்சிக்க வேண்டும். சந்தர்ப்பம் வருவது என்பது இறையாசி. நாங்கள் அந்தச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எம்மைப் போன்ற பல பெண்களுக்கு சந்தர்ப்பங்கள் வரவேண்டிய சமயங்கள் போர்காலத்திலே கழிந்து போய்விட்டது. இருந்தாலும் வாய்ப்புக்களை சரியாக பயன் படுத்திக்கொள்பவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் மிளிர முடியும்.

உண்மை தான் சஞ்சிகா சொன்னபடி வாய்ப்புக்களை சாதகமாக்க தெரிந்தவர்களே! சாதிக்கின்றார்கள்......

சாதிக்கட்டும் சஞ்சிகாவும்........

பேட்டி கண்டவர் :- கிருத்திகா தர்மராஜா - ஊடக விரிவுரையாளர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணொருத்தி......



மதுரையை எரித்த கண்ணகி கோபம்
இன்னும் அடங்கவில்லையோ.....
உலகம் படைத்த உத்தமியே!
கருவில் சுமந்தாயோ.....
உருவில் பெண்ணொருத்தியாய்
உலகம் வென்றாயே
தொலைதூரம் நான் சென்ற வேளையில்
அலைபேசியில் அழைத்தாயே - அம்மாவே!
ஆயிரம் பாசக்கயிற்றில் கட்டியிழுத்தாயே - அக்காவே!
உரிமை தந்திட்ட என் அரசாங்கமே - என் தங்கையே!
உலகின் இறுதி எல்லை நீ என்று உணர வைத்தவளே - மனைவி
மாறுபட்ட உலகத்தின் மனித உயிர் காப்பவள் நீயாகிறாய்.......

காற்றின் ஓசையில் கண் முன் பல கதறல்கள்
பெண்ணின் அடக்குமுறைக்காரர்கள் ஒரு பக்கம்
இயற்கை இன்னொரு பக்கம்
பெண் உருவத்தை கொச்சைப்படுத்தும்
சில ஆண் வர்க்கம் - பல பக்கம்
எத்தனை தடைகள் இருந்தாலும்
விண்ணில் உன் கால் தடம் பதியட்டும்..
மண்ணில் உன் பெயர் பேரொலிக்கட்டும்..
எனி ஒரு காவியம் உன் கவி பாடட்டும்.



உன்னை மிதிக்க சிலர் எண்ணினால்
மீண்டும் எரித்து சாம்பலாக்கு
மதுரையை அல்ல,
சிலர் மனங்களை.

அல்லையூரான் - சி. துகஷ்யந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் இருந்து பட்டப்படிப்பு வரை
தகவல்தொழில் நுட்பக் கல்விக்கு

**DMI**
COMPUTER EDUCATION

**Diploma in**
**Information Technology**
தகவல் தொழில்நுட்ப துறையில் உங்கள் தகைமையினை உயர்த்திக்கொள்ள எம்முடன் இணையுங்கள்

TVEC Reg.No.P25/0056

- IT APPLICATIONS
- HARDWARE NETWORK
- PROGRAMMING
- .NET TECHNOLOGY
- MULTIMEDIA
- NVQ COURSES
- ENGLISH LANGUAGE.

உயர் கல்வி , பட்ட நெறிக்கற்கைகளை தொடர்வதற்கு அடித்தளமான ஒரேயொரு கற்கைநெறியாகும்.
சர்வதேசத்தாலும் இலங்கை அரசாங்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
TVEC இன் நியமங்களுக்கு அமைவாக CAA உள்ளடக்கப்பட்ட 360 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட கற்கைநெறிகளாகும்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

# DMI COMPUTER EDUCATION

**யாழ்ப்பாணம்** No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ்ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403


| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|
| M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | No. 130, K. K. S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-228 5655 | சீரணி சந்தி Tel.:021-225 6665 |



J. Kabinath

Raam
Beauty Centre


NO.381, 1st Floor, K.K.S Rd, Jaffna.
Tel : 077 873 6977 raambeauty@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KAJAMUGAN HARDWARE




**Distributors -**

**Kajamugan Hardware**

**57/47, Stanley Road, Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# KIDS DANCE ACADEMY


Grow your child's love of dancing & performing along with their self - confidence and social skills in our fun filled classes.

**Mini Boppers Class**
**Age 03 - 15 Yrs**
**Weekend Days Only**





**0779343575**
**mathu.baras9@gmail.com**
**Kasthuriyar Road,**
**Jaffna.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜீவா வைத்தியசாலை

## (தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

முகவரி

1091, காங்கேசன்துறை வீதி,
(நாச்சிமார் கோவில் அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
077 559 4147, 021 568 5333

**சேவை நேரம்**

பாலிநகர் வவுனிக்குளம், மாங்குளம்.
புதன் காலை 6.00 - 1.00
வெள்ளி விடுமுறை

யாழ்ப்பாணம்
காலை8.00-மதியம்12.00
மாலை3.00-மாலை05.00

[எல்லோரும் நல்லுறவுடனும் அன்புடனும் சமத்துவத்துடனும் வாழ்வோம்
மக்கள் சேவை மகேசன் சேவை]

பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட எமது 23 தலைமுறைகளுக்குரிய ஓலைச் சுவடிகளில் உள்ள வைத்திய நுணுக்கங்கள் எமக்குக் கிடைத்த பல வைத்திய மேதைகளின் (நல்லூர் அரசர்கள் - செகராஜசேகரன் உட்பட) கைகண்ட வைத்திய முறைகள், யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை, அதி சிறந்த (இந்திய, இலங்கை) ஆயுள்வேத நூல்களில் உள்ளவை மூலமாகவும் இலங்கை இந்திய சித்த ஆயுள்வேத மருந்துக்களில் ஆய்வு செய்யப்பட்டு சிறந்ததென தெரிந்தெடுக்கப்பட்ட பக்கவிளைவற்ற (ISO>GMP சான்றிதழ் பெற்ற நிறுவன தயாரிப்புக்கள்) இயற்கை மருந்துகள் மாற்ற முடியாதென கருதி கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பெயர் பெற்றதுடன் விஷேடமாக குழந்தை இன்மைக்கான சிகிச்சையில் நூற்றுக்கணாக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபலம் அடைந்துள்ளது.

இலங்கையில் மாபெரும் வெற்றி கண்ட குழந்தை இன்மைக்கான சுதேச வைத்தியசாலை

- பக்கவிளைவு அற்ற இயற்கை வைத்தியத்தை விரும்புபவர்களுக்கும், வேறு மனிதர்களின் விந்து, முட்டை, வாடகைத்தாய், சத்திர சிகிச்சை என்பவற்றை விரும்பாதவர்களுக்காகவும்
- சத்திர சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் முதலிய சோதனைகளின் வேதனை, மனச் சோர்வு, என்பவற்றை அனுபவிக்க விரும்பாதவர்களுக்காகவும்
- இந்தியா மற்றும் இலங்கையில் அதிநவீன சிகிச்சைகளால் குணப்படுத்த முடியாது கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காகவும்
- ஆண், பெண் இருபாலருக்குமான குறைகள் நீக்கப்படும்


## சிகிச்சைகள்

- வாதம்
- வயிற்றுப்புண்
- சருமநோய்
- உடல் பருமன்
- நரம்பு வியாதிகள்
- முட்டு
- மூலம்
- சொரியா
- மெலிவு
- மாறாச்சளி
- சிறுநீர்ப்பை கற்கள்
- தலைமுடி உதிர்வு

Dr. சந்திரமாலா ஜெயலன் (DAM)
(25வது பரம்பரை)
முன்னாள் விரிவுரையாளர்,
லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
அரச பதிவிலக்கம் 12128

Dr.ஜெ.ஜெயலன் (DAM)
(7வது பரம்பரை) அரச பதிவிலக்கம் 13461


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

**D.S 589 அரசு அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை**

**இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 4353, 021 492 3200, 071 4546 960**

விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்,
இரவு நேர வாகனப் பயிற்சி,
தவணை முறைக் கட்டணங்கள்,
சகல கிளைகளிலும் வாகனப் பயிற்சி,
விசேட பரீட்சை ஒழுங்குகள்



L No.1 Driving School

### யாழ்ப்பாணம்

- 227/6 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.(மதவடி அருகில்)
  021 224 2022, 071 4546 956
- முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை,
  021 492 3201, 071 4546 961
- 36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கச்சேரி அருகில்)
  021 222 6699, 076 722 5292
- ஓம்பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.
  021 222 6688, 071 777 6969
- கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளைசந்தி, தெல்லிப்பளை.
  021 224 3737, 071 4546 959
- கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்)
  021 227 0700, 071 4546 957
- பிரதான வீதி, போலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி.
  021 300 6550, 071 4546 958
- இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (பல்கலைக்கழகம் முன்)
  021 221 4488, 077 722 7740
- காரைநகர் பிரதான வீதி, சித்தங்கேணி.
  021 225 2500, 076 2121 299

### வவுனியா

- 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்பாக)
  024 222 7777, 0777 100 444

### மன்னார்

- 94, பிரதான வீதி, மன்னார்.
  023 225 1656, 077 847 2732

### கிளிநொச்சி

- ஏ9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக)
  021 228 5505, 071 4546 955
- புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு.
  021 320 1515, 077 8585 263
- நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
  021 300 6544, 070 333 6161
- வாடியடி சந்தி, பூநகரி.
  021 320 1818, 070 333 7171


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org